

# ANNAI WOMEN'S COLLEGE

**(Arts and Science)**

**(Affiliated to Bharathidasan University – Tiruchirapalli.)**

**TNPL Road, Punnamchathram, Karur.-639136**

## TAMIL DEPARTMENT

## COURS MATERIAL

# பாடத்திட்டம்.

அலகு - 1
மெய்ப்பாட்டு இயல்

அலகு - 2
உவமை இயல்

அலகு - 3
செய்யுளியல் (செய்யுள் உறுப்புகள் முதல் - 119 நூற்பா)

அலகு - 4
120- முதல் 235 வரை

அலகு - 5
மரபியல்.

Scanned with CamScanner

பண்பாகிய நாணமும் (நாணும்), இளமைத் தன்மையும் (மடனும்), நோய்த் துன்பமும் (நோயும்) ஆசையும் (வேட்கையும்), நுகர்ச்சி அநுபவமும் (நுகர்வும்) என்று வகைப்படுத்தப்பட்ட இவைகளுக்கான உண்மைப் பொருளை, அவரவர் மனத்தாலும் அறிவாலும் உணர்ந்தறிந்து, நாட்டிலே வழங்கி வரும் மரபு வழிப் பொருள் அறிய மனங்கொள்ள வேண்டுமே அல்லாது, இதற்கு இதுவே பொருளெனக் காட்ட இயலாத தன்மையன இவை, என்பர் புலவர் பெருமக்கள்.

### இப்பொருள் மெய்ப்பொருள்

**இமையோர் தேஎத்தும் எறி கடல் வரைப்பினும்**
**அவை இல் காலம் இன்மையான.** 1190

இமையோர் - இமைக்காத விழி உடைய தேவர்கள் வாழும் தேவர் உலகிலும், அலை எறியும் கடலே (எறிகடல்) எல்லையாக உள்ள நில உலகிலும், முந்தைய சூத்திரத்தில் குறித்த, ஒப்பும், உருவும், செறிவும், கற்பும், புதுப்பொலிவும் அழகும், சாயலும், நாணமும், வெட்கமும், பிணியும், வேட்கையும் துய்த்தலும் என்றுள்ள இவை இல்லாத - அதாவது இவை நிகழாத - இடம் பெறாத வாழ்க்கை நிலை இல்லை. எனவே இவை, எக்காலத்தும் போற்றப்படும் பொருள்கள் என்று சொல்லத்தக்கனவாம்.



27

## 6. மெய்ப்பாட்டியல்

### மெய்ப்பாடுகளின் வகை

மெய் - உடம்பு. பாடு - செயல்பாடு. உள்ளத்து உணர்வுகள் உடலில் வெளித்தோன்றத் தெரியும். உள்ளத்துள் உண்டாகும் மகிழ்ச்சி, சினம், இரக்கம் இன்னபிற உணர்வுகள் முகக் குறிப்பாலும் அங்க அசைவுகளாலும் வெளித் தோன்றுதலை, அதன் வகைகளை விரித்துரைக்கும் இயல் - மெய்ப்பாட்டியல் எனப்பட்டது.

**பண்ணைத் தோன்றிய எண் நான்கு பொருளும்**
**கண்ணிய புறனே நால் - நான்கு என்ப.** 1191

மகளிர் விளையாட்டில், ஆடலிலும், பாடலிலும் தோன்றிய முப்பத்திரண்டு பொருளும் கருதி வெளிப்படும் மெய்ப்பாடு பதினாறு என்பர். எண் நான்கு 8 x 4 = 32. கண்ணிய - கருதிய நால் நான்கு - 4 x 4 = 16. நகை, அழுகை, இளிவரல், வியப்பு, அச்சம், வீரம், உவகை, நடுவுநிலை என்னும் எட்டு மன இயல்புகளும், சுவைக்கும் பொருள், நுகரும் பொறியுணர்வு, உள்ளக் குறிப்பு, உடல் குறிப்பு என்னும் நான்கோடும் ஒவ்வொன்றும் சேர (4 x 8) முப்பத்திரண்டாகும். எட்டு மெய்ப்பாடும் உள்ளக் குறிப்பாக உடலில் தோன்று 'மாற்றம் அல்லது செயல் வெளிப்பாடு' எனும் வகையில் (8 x 2) பதினாறாகும்.

### மெய்ப்பாடுகளின் தொகை எட்டு

**நால் இரண்டு ஆகும் பாலுமார் உண்டே.** 1192

முன் சூத்திரத்தில் சொன்ன முப்பத்திரண்டு மெய்ப்பாடுகள், பதினாறாதல் போலவே, பதினாறான மெய்ப்பாடுகள் எட்டாவதும் உண்டு. அ வை வீரம், அச்சம், வியப்பு, இழிபு, காமம், அவலம், நகை, நடுவுநிலை, பாலுமார் உண்டே என்றதனால் பெருஞ்சினம் என்பது சேர ஒன்பதாகும்.



Scanned with CamScanner

### எட்டின் வகை

**நகையே அழுகை இனிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப.** 1193

சிரிப்பு (நகை) கண்ணீர் விட்டழுதல் (அழுகை), இழிபு (இனிவரல்), ஆச்சரியம் (மருட்கை), பயம் (அச்சம்), வீரம் (பெருமிதம்), கோபம் (வெகுளி), மகிழ்ச்சி (உவகை) என்னும் எட்டு உணர்வு வெளிப்பாடுகளையே மெய்ப்பாடென்பர் புலவர்.

### நகை

**எள்ளல் இளமை பேதைமை மடன் என்று**
**உள்ளப்பட்ட நகை நான்கு என்ப.** 1194

எள்ளல் - பிறரை எள்ளி நகையாடுதல் - இகழ்தல், இளமை - தன் இளமை காரணமாக, அதைக் கடந்தவரைப் பழித்தல், பேதைமை - அறிவின்மை; மடன் - மடமை நல்லது தீயது அறியா மூடத்தனம் என்னும் இந்நான்கு இடங்களும் நகை தோன்றுதற்கு உரியன.

### அழுகை

**இளிவே இழவே அசைவே வறுமை என**
**விளிவு இல் கொள்கை அழுகை நான்கே.** 1195

இளிவு (இழிவு நிலையில் தாழ்தல்), இழிந்த நிலை, இழவு (இழப்பு), அசைவு (தளர்ச்சி மூன்றிலும் ஏ அசை) வறுமை (இல்லாமை) என்னும் நான்கு நிலைகளிலும் அழுகை தோன்றும். விளிவில் கொள்கை - கேடில்லாத நிலை. இது உவகையால் வரும் ஆனந்தக் கண்ணீர் உகுக்கும் அழுகை நிலை குறித்தது.

### இளிவரல்

**மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு**
**யாப்புற வந்த இளிவரல் நான்கே.** 1196



முதுமை (மூப்பு), நோய் (பிணி), கவலை (வருத்தம்), இயலாமை (மென்மை -மெலிவு) என்னும் நான்கு நிலைகளிலும் இழிவு இடம் பெறும். யாப்புற - உறுதியாக, நிச்சயமாக. இளிவரல் - இழிந்த நிலை.

### மருட்கை

**புதுமை பெருமை, சிறுமை, ஆக்கமொடு**
**மதிமை சாலா மருட்கை நான்கே.** 1197

புதிதாக ஒன்றை காணும் போதும், கேட்கும் போதும், உணரும் போதும் (புதுமை), பெருமைக்குரியதாகுமிடத்தும், சிறுமைப்படும் இடத்தும் வளர்ச்சியின் கண்ணும் (ஆக்கம்) வியப்பு வெளிப்படும். மதிமைசாலா - (மதி - அறிவு) அறிவுக்குப் படாத, காரணம் இல்லாது. மருட்கை - வியப்பு

### அச்சம்

**அணங்கே விலங்கே கள்வர் தம்இறை எனப்**
**பிணங்கல் சாலா அச்சம் நான்கே.** 1198

தெய்வம் (அணங்கு), மிருகம் (விலங்கு), திருடர் (கள்வர்) தம் தலைவர் - அரசர் (தம் இறை) என்னும் நான்கிடத்தும் பயம் தோன்றும். பிணங்கள் சாலா அச்சம் - வேறுபாடின்றித் தானே தன்னுள் தோன்றும் பயம்.

அணங்கு என்பதற்குத் தெய்வம், பேய், பேய்மகள் எனப் பல பொருள் உண்டு என்றாலும், ஏற்ற பொருளாகத் தெய்வமே கொள்ளப்பட்டது. தெய்வத்திடம் பக்தி தானே வரும். பயம் வருமா? எனில், தீமை செய்தால் தெய்வம் தண்டிக்கும் என்ற அச்சம் வரும். பக்தியும் பயபக்தி என்றே அழைக்கப்படுகிறது. எனவே அணங்கு என்பதற்கு தெய்வம் என்றே பொருள் கொள்ளல் பொருந்தும்.

Scanned with CamScanner

### பெருமிதம்

கல்வி தறுகண் புகழ்மை கொடை எனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே. 1199

கற்றறிந்த ஞானம் (கல்வி), அச்சமின்மை (தறுகண்), செல்வாக்கு (புகழ்மை), பிறர்க்குத் தந்துதவும் ஈகைக் குணம் (கொடை) என்று சொல்லப்படும் இந்நான்காலும் வீரம் பிறக்கும். பெருமிதம் - வீரம்.

### வெகுளி

உறுப்பறை குடிகோள் அலை கொலை என்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே. 1200

உடலுறுப்பைக் குறைத்தல், குடிப் புகழுக்குக் கேடு உண்டாக்குதல் (குடிகோள்) அடித்துத் துன்புறுத்தல், கொலை செய்யத் துணிதல் என்னும் இந்நான்கு வெறுக்கத்தக்க செயல்களால் கோபம் (வெகுளி) உண்டாகும். உறுப்பு - உடலுறுப்பு, கை கால் கண் முதலியன அறைதல் - குறைத்தல், துண்டித்தல். அலை - கோல் கொண்டு அடித்துத் துன்புறுத்துதல்.

### உவகை

செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
அல்லல் நீத்த உவகை நான்கே. 1201

பொன் பொருளால் வரும் பயன் நுகர்வு (செல்வம்), கூடி அறிவுப் புலமையால பெறும் அறிவுடைமை (புலன்) மகிழும் காமத்தால் அடையும் இன்ப நுகர்ச்சி (புணர்வு), ஆடல், பாடல் என்னும் இன்ப விளையாட்டுகளால் பெறும் குதூகலம் (விளையாட்டு); என்றுள்ள இந்த நான்கும் மனக்கவலை (அல்லல்) போக்கி, உள்ளத்துள் மகிழ்ச்சி உண்டாகச் செய்வனவாம் - உவகைக்கு அடையாளங்களாகும். நீத்த - நீக்கிய.

### மெய்ப்பாடுகள் முப்பத்தி இரண்டு

ஆங்கவை ஒரு பால் ஆக, ஒரு பால்,
உடைமை, இன்புறல்,நடுவு நிலை, அருளல்,



தன்மை, அடக்கம், வரைதல், அன்பு, எனாஅ -
கைம்மிகல், நலிதல், சூழ்ச்சி, வாழ்த்தல்,
நாணுதல், துஞ்சல், அரற்று, கனவு, எனாஅ -
முனிதல், நினைதல், வெரூஉதல், மடிமை,
கருதல், ஆராய்ச்சி, விரைவு, உயிர்ப்பு, எனாஅ-
கையாறு, இடுக்கண், பொச்சாப்பு, பொறாமை,
வியர்த்தல், ஐயம், மிகை, நடுக்கு, எனாஅ-
இவையும் உளவே அவை அலங்கடையே. 1202

'நகை' தொடங்கி உவகை வரை எட்டுத் தலைப்புகளில் முன் சூத்திரங்களில் கூறிய முப்பத்திரண்டும், ஒரு பக்கமாக (ஒரு பால்) இன்னொரு பக்கமாக (ஒருபால்), செல்வம் (உடைமை) செல்வப் பயனான துய்த்தல் (இன்புறல்) தருக்கும் செருக்கும் இன்றி நடுவுநிலை நிற்றல் (நடுவுநிலை) எவ்வுயிர்க்கும் அன்பு செய்யும் அருளுள்ளம் கொண்டிருத்தல் (அருளல்) தயவுடைமை (தன்மை), பணிவு (அடக்கம்), வகுக்கப்பட்டுள்ள அறவொழுக்கம் வழுவாதிருத்தல் (வரைதல்) அன்புடைமை (அன்பு) என்றுள்ள இவையும் (எனா); எல்லை கடந்து போதல் (கைமிகல்) பிறர் வருந்தச் செய்தல் (நலிதல்) சூழ்ச்சியில் ஈடுபடல் (சூழ்ச்சி) வாழ்த்துதல் (வாழ்த்தல்) வெட்கப்படுதல் (நாணுதல்) உறங்குதல் (துஞ்சல்) புலம்புதல் (அரற்றல்), கனவில் உளறுதல் (கனவு), என்றுள்ளவையும் (எனாஅ); கோபித்தல் (முனிதல்) எண்ணுதல் (நினைத்தல்) துணுக்குறுதல் (வெரூஉதல்), சோம்பல் (மடிமை), யோசித்தல் (கருதல்) சிந்தித்தல் அல்லது ஆய்ந்தறிதல் (ஆராய்ச்சி) விரைந்து செயல்படுதல் (விரைவு) நெடுமூச்செறிதல் (உயிர்ப்பு) என்றுள்ளவையும்; செயலிழத்தல் (கையாறு), துன்பம் (இடுக்கண்), மறதி (பொச்சாப்பு), பிறர்புகழ் பொறுத்தலின்மை (பொறாமை), மனப்புழுக்கம் (வியர்த்தல்), சந்தேகம் (ஐயம்), தடுமாற்றம் (மிகை) கவலையால் மனநடுக்கம் அடைதல் (நடுக்கம்) என்னும் இம்முப்பத்தி இரண்டும்,

Scanned with CamScanner

மெயப்பாடு எனப்படும். அலங்கடை - அல்லாத இடத்து, முன் சொன்னவை தவிர இவையும். அவை அல்லாத இடத்து என்பது பொருள்.

### காதல் வெளிப்பாடே ஆரம்பம்

**புதுமுகம் புரிதல் பொறி நுதல் வியர்த்தல்**
**நகு நயம் மறைத்தல் சிதைவு பிறர்க்கு இன்மையொடு** 1203
**தகுமுறை நான்கே ஒன்று என மொழிப.**

புதுமுகம் புரிதல் - ஒருவரை ஒருவர் கண்களால் கண்டு களித்துக் கருத்தில் கலந்து, மனத்துள் புகுந்து மகிழல்; பொறிநுதல் வியர்த்தல் - நாணத்தால் அழகிய நெற்றியில் வியர்வை துளிர்த்தல்; நகுநயம் மறைத்தல் - இந்த இன்ப நினைவுகளால் ஏற்பட்ட மகிழ்ச்சியை வெளித் தெரியாதபடி அடக்குதல்; தலைவன் பார்வையால் தான் உள்ளம் செயல் இழந்து, தன்வசமின்றிப் போய்விட்டதெனப் பிறர் அறிந்து கொள்ளாதபடி மறைத்தல், (சிதைவு பிறர்க்கு இன்மை) என்னும், காதல் ஒழுக்கத்திற்கேற்ற செயல்கள் (தகுமுறை) நான்கும், மெய்ப்பாட்டின் ஒரு பகுதியாகும். சிதைவு - மனம் அழிதல். பிறர்க்கு இன்மை - பிறர் அறியாதபடி மறைத்தல்.

### இது இரண்டாம் கட்டம்

**கூழை விரித்தல் காது ஒன்று களைதல்**
**ஊழ் அணி தைவரல் உடைபெயர்த்து உடுத்தலொடு**
**ஊழி நான்கே இரண்டு என மொழிப.** 1204

கண்வழி புகுந்து, கருத்தில் கலந்து, மனத்துள் புகுந்து மகிழ்ந்த தலைவனும், தலைவியும் மெய்யுறத் தழுவி மகிழும் நிலையில கூந்தல் கலைந்து குலைகிறது. காதுத் தோடுகள் நழுவுகின்றன. தழுவிய தலைவனை விட்டு விலகிய தலைவி கலைந்த கூந்தலைக் கோதிச் சரி செய்து கொள்கிறாள். கழன்ற



காதணியைச் சரிசெய்து காதிலே பூட்டிக் கொள்கி[றாள்]. கைவளையல்களை சரி செய்து, பொருத்திக் கொள்கி[றாள்]. நெகிழ்ந்து சரிந்த ஆடையை நேர் செய்து உடுத்திக் கொள்கி[றாள்]. முறையாக இடம் பெறும் இந்நான்கும் இரண்டாம் க[ட்ட] மெய்ப்பாடென்பர் புலவர் பெருமகள். கூழை - கூந்[தல்] காதொன்று - ஒரு பக்கக் காதுத்தோடு. ஊழணி - முறை[யாக] அணியப்படும் வளையல். தைவரல் - தடவுதல். உ[டை] பெயர்த்தல் - ஆடையைச் சரி செய்தல். ஊழி நான்[கு] முறைப்படியான நான்கும்.

### மூன்றாம் கட்டம்

**அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்**
**இல்வலி உறுத்தல் இருகையையும் எடுத்தலொடு**
**சொல்லிய நான்கே மூன்றென மொழிப.**

ஆடையைச் சரி செய்தவள் மறைவிடம் மூட அத[ை] சரிப்படுத்துதல், அணிந்திருந்த - கலைந்த அணிமணி[களை] ஒழுங்குபடுத்துதல் (திருத்தல்), கூடலில் தனக்கு விரு[ப்பம்] இல்லாமையை வலியுறுத்திக் கூறல் (இல்வலியுறுத்தல்) தழு[விய] இரு கைகளையும் விடுவித்துக் கொள்ளுதல் (தடுத்தல்) இங்கு சொல்லப்பட்ட நான்கும் மூன்றாம் நிலை மெய்ப்பா[டு] சொல்லுவர் (மொழிப) புலவர். அல்குல் - மறைவிடம் தை[வரல்] - சரிசெய்தல். இங்கு மறைத்தல். அணிந்தலை - அணிந்[த]தவைகளை.

### நான்காம் கட்டம்

**பாராட்டு எடுத்தல் மடம் தப உரைத்தல்**
**ஈரம்இல் கூற்றம் ஏற்றுஅலர் நாணல்**
**கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ**
**எடுத்த நான்கே நான்கு என மொழிப.**

தலைவியோடு கூடி மகிழ்ந்த தலைவன் தலைவியைப் பலவாறு பாராட்டிப் புகழ்ந்து பேசுதலும், இப்படிக் கூடியதால் அவள் வருந்துவது கண்டு, அவளது அறியாமை அகலத் தேற்றித் தெளிவுறுத்தலும் (உரைத்தல்) தலைவனோடு கொண்ட களவொழுக்கம் அறிந்தால், இரக்கமில்லாத அரக்கமனம் படைத்த சுற்றத்தார் அலர் தூற்றுவதை எண்ணி வெட்கப்படுதலும், தலைவன் தரும் மாலையும், குழையும், கண்ணியும் கொள்ளுதலும் என்று; தெளிவுறத் தொகுத்துச் சொன்ன (உளப்படத் தொகைஇ) நான்கும் மெய்ப்பாட்டின் நான்காம் கட்டமெனச் சொல்லுவர் (மொழிப). மடம் - அறியாமை. தப - கெட. ஈரம் - இரக்க உணர்வு. கூற்றம் ஏற்றலர் - கொடிய சொற்களைக் கூறித் தூற்றும் அலர். நாணல் - வெட்கப்படல். கோடல் - கொள்ளுதல். அலர் தூற்றுதலாவது - பழி கூறுதல்.

### ஐந்தாம் கட்டம்

**தெரிந்து உடம்படுதல் திளைப்பு வினைமறுத்தல்**
**கரந் திடத்து ஒழித்தல் கண்டவழி உவத்தலொடு**
**பொருந்திய நான்கே ஐந்தென மொழிப.** 1207

தனது களவொழுக்கத்தை மறைத்தும், அது வெளித் தெரியின் ஏற்படும் கேட்டை எண்ணிப் பார்த்து, தன் குடிப் புகழும் மென்மையும், இழுக்கடையாதவாறு தோழிக்கும், தோழி மூலம் செவிலிக்கும், ஒருவாறு தெரிவிக்க உடன்படுதலும் (தெரிந்து உடன்படுதல்), உடன்பட்ட பின்னர் தலைவனோடு கூடி முன்போல ஆடிப்பாடித் திளைத்திருக்க, அச்சமும் நாணமும் தடுத்தலால் (வினை மறுத்தல்) மறுப்பதும், தலைவன் பார்வையில் படாதபடி மறைந்திருத்தலும், ('கரந்துஇடத்து ஒழிதல்'), அவனைக் கண்டுவிட்டால் கழிபேருவகை கொள்வதும் (உவத்தல்) ஆகிய நான்கும் மெய்ப்பாட்டின் ஐந்தாம் நிலை என்பர். திளைப்பு - திளைத்தல். கரத்தல் - மறைத்தல்.



### ஆறாம் கட்டம்

**புறம் செயச் சிதைத்தல் புலம்பித் தோன்றல்**
**கலங்கி மொழிதல் கையறவு உரைத்தலொடு**
**விளம்பிய நான்கே ஆறு என மொழிப.** 1208

புறம் செய - புறத்தே - வெளியே செய்து கொள்ளும் அலங்காரங்களை நீக்கிக் கொள்ளுதல், சுற்றத்தார் பலரிருந்தும் அவர்களிடையே தனியளாய் நின்று தவித்தல், என்ன பேசுகிறோம் என்று புரியாது கலக்கமுற்றுத் தடுமாறு மொழி பேசுதல், செயலற்ற நிலையில் இருப்பதைச் சொல்லுதல், என விளங்கச் சொல்லிய நான்கும் மெய்ப்பாட்டின் ஆறாம் பகுதி என்பர். புறம்செய் - புறத்தே வெளியே புனைந்து கொள்ளும் பூவும் சாந்தும். சிதைத்தல் - அழித்தல். கையறவு - செயலற்ற தன்மை.

### கற்பொழுக்கக் காட்சி தொடக்கம்

**அன்னபிறவும் அவற்றொடு சிவணி**
**மன்னிய வினைய நிமித்தம் என்ப.** 1209

மெய்ப்பாட்டின் ஆறு நிலைகளிலும் விளக்கப்பட்ட மெய்ப்பாடுகள் இருபத்தினான்கும். இவற்றோடு பொருந்தி வரும் இன்ன பிறவும், கற்பு ஒழுக்கத்திற்கான (வினைய) அடையாளங்களாகும். சிவணி - பொருந்தி. மன்னிய - நிலைபெற்ற. நிமித்தம் - அடையாளம்.

### மேனி மெலிவு - மெய்ப்பாடு அல்ல

**வினை உயிர் மெலிவிடத்து இன்மையும் உரித்தே.** 1210

உயிர் வினை மெலிவிடத்து - உயிர்ப்புடைய தலைவன் தலைவி இவர்கள், ஆற்றாமை அல்லது இயலாமையால் நலிவுற்ற நிலையில், இங்கே கூறிய மெய்ப்பாடுகள் எதுவும் இடம் பெறாமல் போதலும் உண்டு.

**கைக்கிளைக்கும் பொருந்தும் இது**

**அவையும் உளவே அவை அலங்கடையே.** 1211

முன் சொல்லப்பட்ட 'புதுமுகம் புரிதல்' முதலாகக் 'கையறவு உரைத்தல்' வரையிலான இருபத்து நான்கு மெய்ப்பாடுகளும் (அவையும்) ஐந்திணை ஒழுக்கத்துக்கு அல்லாத (அலங்கடை) கைக்கிளைக்கும் பொருந்துவனவாம்.

**இவை பெருந்திணைக்கு**

**இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல்,**
**எதிர் பெய்து பரிதல், ஏதம் ஆய்தல்,**
**பசி அட நிற்றல், பசலை பாய்தல்,**
**உண்டியின் குறைதல், உடம்பு நனி சுருங்கல்,**
**கண் துயில் மறுத்தல், கனவொடு மயங்கல்,**
**பொய்யாக் கோடல், மெய்யே என்றல்,**
**ஐயம் செய்தல்அவன் தமர் உவத்தல்,**
**அறன் அளித்து உரைத்தல், ஆங்கு நெஞ்சு அழிதல்,**
**எம் மெய்ஆயினும் ஒப்புமை கோடல்,**
**ஒப்புவழி உவத்தல், உறு பெயர் கேட்டல்,**
**நலத் தக நாடின், கலக்கமும் அதுவே.** 1212

பூவும் சாந்தும் அணிந்து மகிழ்தல், ஆடிப்பாடிக் களித்தல் ஆகிய இன்ப நுகர்வுகளை வெறுத்தல், பிரிவுத் துன்பத்தைத் தாங்கிக் கொள்ளமாட்டாது அழுது புலம்புதல், தலைவன் உருவைத் தன்னெதிர் வருவித்துக் கொண்டு தளர்வுறுதல், (எதிர்பெய்து புரிதல்) தலைவன் வரத் தடையாக உள்ள இடையூறுகளை எண்ணிப் பார்த்தல், பசிவந்து வருத்தினும், பசியாற உணவுண்ண விருப்பமின்றி இருத்தல் (பசி அடநிற்றல்), களவொழுக்கம் காரணமாக உடலில் பசலை படருதல் (பசலை பாய்தல்) உண்ணும் உணவின் அளவு குறைதல் (உண்டியின் குறைதல்) உணவு குறைதலால் உடல் மெலிதல் (உடல் நனி



சுருங்கல்) கண் உறக்கம் கொள்ளாதிருத்தல் (கண் து
மறுத்தல்) தலைவன் தன்னிடம் வரக் கண்ட கனவை நிசம் எ
எண்ணி மதிமயங்குதல் (கனவொடு மயங்கல்); விரைவில் வ
விடுவேன் என்று சொல்லிப்போன தலைவன் வராமை க
தலைவன் சொன்னது பொய்யோ என எண்ணுதல் (பொய்
கோடல்); 'இல்லை' இப்படியிருக்காது, விரைவில் வ
விடுவான் என்று தலைவன் உரைய்யை நிசமென்று நினைத்
(மெய்யே என்றல்) இனிப் பிரியேன் என்றவன், இவ்வளவு
பிரிவைத் தந்துவிட்டானே என்று, அவன் தந்த உ
மொழியையே சந்தேகித்தல் (ஐயம் செய்தல்), தலைவனு
சுற்றத்தார்களைக் கண்டவிடத்து அவனையே கண்டது ே
மகிழ்தல் (அவன் தமர் உவத்தல்), எப்போதும் தலைவ
எதிர்பார்த்துக் காத்திருக்கையில் பல்லி சொல்லும் நிமித்
நல்லதாக இருக்க வேண்டுதல், அல்லாத இடத்து அ
கடவுளையே நிந்தித்து நெஞ்சோடு புலம்பல் (அறன
துரைத்தல், ஆங்கு நெஞ்சழிதல்) காணும் பொருளை எல்
தலைவனோடு ஒப்பிட்டு மகிழ்தல் (ஒப்புமை கோடல்) இ
ஒப்புவமை காணலில் ஒருவாறு மனம் தேறி கவலை மற
இருத்தல், தலைவன் புகழைப் பிறர் கூறக் கேட்டுக் குதூகலித்
(உறுபெயர் கேட்டல்), அல்லாதன கூறக் கேட்டால் மனம் கல
அவை பொய்யாகி நல்லதே நடக்க வேண்டும் எ
வேண்டுதல்; இவையெல்லாமும் கூட மெய்ப்பாடுகள
அடையாளமே ஆகும். இவை பெருந்திணைக்கு உரிய
என்றும் கூறப்படும். பரிதல் - வருந்துதல். ஏதம் - குற்றம். பச
- தேமல். நனி - மிக. ஐயம் - சந்தேகம். தமர் - உறவி
உவத்தல் - மகிழ்தல். அழிதல் - வருந்துதல். எம்மெய் ஆயி
- எப்பொருளாயினும். ஒப்புவழி உறுத்தல் - ஒப்பிட்
பார்த்தறிதல். உறு பெயர் - கூறும் பெயர். நலத்தக - ந
படியாக.

Scanned with CamScanner

## புறனடை

### காதல் படுத்தும் பாடு

முட்டுவயின் கழறல், முனிவு மெய்ந் நிறுத்தல்,
அச்சத்தின் அகறல், அவன் புணர்வு மறுத்தல்,
தூது முனிவு இன்மை, துஞ்சிச் சேர்தல்,
காதல் கைம்மிகல், கட்டுரை இன்மை, என்று
ஆயிரு - நான்கே அழிவு இல் கூட்டம். 1213

களவொழுக்கம் தடைப்பட்டதற்கு வருத்தத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல், தலைவனை இடித்துரைத்தல்; கோபத்தை வெளிக்காட்டாமல், மனத்துள் அடக்கி வைத்தல், எங்கே தன் காதல் வெளித் தெரிந்து விடுமோ என்று அஞ்சி, கூட்டத்தில் சேராமல் விலகி ஒதுங்கி இருப்பது; தலைவனுடன் மீண்டும் கூடி மகிழ விரும்பாதிருப்பது, மேகம், பறவை எனத் தூது விட மறுக்காமை, பொய்யுறக்கம் கொள்ளுதல், காதல் எல்லை மீறிப்போன நிலையில், இயல்பாக இடம்பெறும் நிகழ்வும், எவருடனும் மனம்விட்டுப் பேசாது தன் மனதில் உள்ளதை மறைத்தல் என்றுள்ள மெய்ப்பாடுகள் எட்டும் (ஆயிரு நான்கு) அழிவற்ற (அழிவுஇல்) மணவாழ்க்கை எனும் கூட்டத்திற்கு உரியனவாகும். முட்டு - தடை. கழறல் - இடித்துரைத்தல். முனிவு - கோபம். வருத்தம். மெய் - உடம்பு. அகறல் - நீங்குதல். முனிவு இன்மை - வெறுப்பின்மை. துஞ்சுதல் - தூங்குதல். கைமிகல் - அளவு மீறுதல். கட்டுரை - பேச்சு.

### கற்பொழுக்கத்துக்கு அடையாளம்

தெய்வம் அஞ்சல், புரை அறம் தெளிதல்,
இல்லது காய்தல், உள்ளது உவர்த்தல்,
புணர்ந்துழி உண்மை, பொழுது மறுப்பு ஆக்கம்,
அருள் மிக உடைமை, அன்பு தொக நிற்றல்,



பிரிவு ஆற்றாமை, மறைந்தவை உரைத்தல்,
புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇ,
சிறந்த பத்தும் செப்பிய பொருளே. 1214

வழிபடும் தெய்வத்திற்குப் பயந்து, பக்தி செலுத்துவதும், தனக்குரியதான - குற்றமற்ற மனை அறம் எதுவெனத் தெளிந்து அறிதல், அவனிடம் இல்லாத குறையை இட்டுக்கட்டி இருப்பதாகச் சொல்லி ஊடுதல், ஊடல் நீங்கித் தலைவனின் காதலன்பைக் கண்டு கொள்ளாதது போலிருத்தல், கூடி மகிழ்ந்த காலத்தில் கொண்ட உணர்வுகளைக் கூறுதல், பொழுது போனது தெரியாது மகிழ்ந்திருந்த மனநிறைவு (ஆக்கம்) அன்பு மிகுதிப்பட்டிருத்தல், பிரிவை பொறுத்துக் கொள்ளாமை, மறைவாகக் கொண்ட களவொழுக்கத்தால் புறங்கூறுவார் தூற்றிய அலர் - பழிச்சொல், எனத் தொகுத்துச் (தொகைஇ) சொல்லிய உயர்வான மெய்ப்பாடுகள் பத்தும், கற்பொழுக்கத்துக்கு உரியனவாம் (புறஞ்சொல் மாணாக்கிளவி - அலர் நீக்க பத்து) காய்தல் - கோபித்தல். உவர்த்தல் - வெறுத்தல். கிளவி - சொல், பழி.

### இல்லறம் சிறக்க உதவும் இவை பத்தும்

பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டொடு,
உருவு, நிறுத்த காம வாயில்,
நிறையே, அருளே, உணர்வொடு, திரு, என
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே. 1215

ஒத்த குடிப்பிறப்பும் (பிறப்பே), ஒத்த பண்பொழுக்கமும் (குடிமை), ஒத்த ஆளுமையும் (ஆண்மை), ஒத்த வயதும் (ஆண்டு), ஒத்த தோற்றப் பொலிவும் (உருவு), ஒத்த அன்பும் (நிறுத்த காம வாயில்), ஒத்த குணநலமும் (நிறையே), ஒத்த அருளுள்ளமும் (அருளே), ஒத்த அறிவும் (உணர்வு) ஒத்த செல்வச் சிறப்பும் (திரு) என்னும் இப்பத்துப் பேறுகளும்,

Scanned with CamScanner

தலைவன் - தலைவி இருவருக்கும் இடையே இருக்க வேண்டிய ஒப்புமைப் பண்புகளாம். காதலுக்கும் கற்புக்கும், இல் வாழ்க்கைக்கும் இருவருக்கும் ஆதாரத் துணையாக இருப்பது அன்பு ஆதலின், அது நிறுத்த காமவாயில் எனப்பட்டது

### இல்லற வாழ்வில் இருக்கக் கூடாதவை

'நிம்பிரி, கொடுமை, வியப்பொடு, புறமொழி,
வன்சொல், பொச்சாப்பு, மடிமையொடு, குடிமை,
இன்புறல், ஏழைமை, மறப்பொடு, ஒப்புமை,
என்று இவை இன்மை' என்மனார் புலவர். 1216

பொறாமை (நிம்பரி), தீமை செய்யும் எண்ணம் (கொடுமை), தன்னை உயர்வாக நினைத்துத் தருக்குதல் (வியத்தல்), புறங்கூறுதல் (புறமொழி), சுடுசொல் (வன்சொல்), பொறாமை (பொச்சாப்பு), சோம்பல் (மடிமை), தன்னுடைய குலப்பெருமையைத் தானே பேசித் தன்னையே உயர்வாகக் கருதிக் கொள்ளுதல் (குடிமை), இன்ப ஈடுபாடு மிகுதல் (இன்புறல்), பேதைமை (ஏழைமை), மறதி (மறப்பு), ஒப்பிட்டுப் பார்த்தல் என்று கூறப்படும் இவையெல்லாம், தலைமகளுக்கு இருக்கக் கூடாத குணங்களாகும்; என்பர் புலவர் பெருமக்கள்.

### அறிஞரே அறிவர் மெய்ப்பாட்டருமை

கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது, தெரியின்,
நல் நயப் பொருள்கோள் எண்ண அருங்குரைத்தே. 1217

கண்ணால் கண்டும், (கண்ணினும்) காதல் ஒன்றின் தன்மையை, நல்லது கெட்டதைக் கேட்டு, உறுதிபட அதுபற்றித் தெரிந்து கொள்ளும், அறிவுணர்வுள்ள மக்களுக்கே அல்லாது, மற்றையோர்க்கு, மெய்ப்பாட்டின் உண்மைப் பொருளுணர்ந்தறிதல் இயலாதாகும். திண்ணிதின் - உறதியாக.



நன்னயம் - நல்ல விதம். எண்ண - எண்ணிப் பா... அருங்குரைத்தே - அருமை உடையதே.

## 7. உவமை இயல்

### உவமையாவது...

அறியாத ஒரு பொருளை உணர்த்த அதைப் போ... இன்னொரு பொருளைச் சுட்டி, இது போன்றது அது எ... விளக்கிக் காட்டிச் சொல்லும் பொருள் உவமையாகும்.

### அதன் வகை

வினை பயன் மெய் உரு என்ற நான்கே
வகை பெற வந்த உவமத் தோற்றம். 12..

தொழில் (வினை), பயன்பாடு (பயன்), வடிவம் (மெ... நிறம் (உரு) என நான்கு வகையாலும் உவமை தோன்றும்.

### அது...

விரவியும் வரூஉம் மரபின என்ப. 121..

முந்தைய சூத்திரத்தில் சொன்ன தொழில், பயன், வடிவ... வண்ணம் என்ற நான்குடனும் தனித்தனியே வருதலில்லாம... இரண்டும், அதற்குமேலும் கலந்தும் வரும் தன்மையது என்ப...

### உவமை என்பது உயர்ந்ததன் மாட்டே

உயர்ந்ததன் மேற்றே உள்ளும் காலை. 122..

உவமித்துச் சொல்லப்படும் பொருள் உயர்ந்ததாக இருக்... வேண்டும் என்பது எண்ணிப் பார்க்கில் புரியும். உள்ளுங்கால... - நினைக்குமிடத்து.

Scanned with CamScanner

### உவமைக் களம்

சிறப்பே நலனே காதல் வலியொடு
அந் நால் பண்பும் நிலைக்களம் என்ப. 1221

உயர்ந்தவற்றோடு உவமிக்கப்படுவது உவமை என்றாலும், புகழ்ச் சிறப்பு (சிறப்பே) அழகு நலம் (நலனே) காதல் நலம் சான்ற - இல்லறம், வலிமை என்னும் நான்கையும், அது இடமாகக் கொண்டு வரும் என்பர் புலவர் பெருமக்கள்.

கிழக்கிடும் பொருளோடு ஐந்தும் ஆகும். 1222

உவமை என்பது உயர்ந்ததன் கண்ணதே ஆனாலும் ஒரோ வழித் தாழ்ந்த பொருளோடு உவமிக்கப்படுதல் உண்டு. அந்நிலையில் உவமை தோன்றுமிடம் நான்கல்ல, ஐந்து. கிழக்கிடும் - கீழிடும், தாழ்ந்திடும்.

### முதலும் சினையும்

முதலும் சினையும் என்று ஆயிரு பொருட்கும்
நுதலிய மரபின் உரியவை உரிய. 1223

முதற்பொருளும் சினைப் பொருளும் என்னும் இரண்டு பொருட்டும் (ஆயிரு பொருட்டும்) நூல் முறையில் சொல்லிய படி மரபுபட வருமாயின், உவமை ஏற்க உரியவைதாம். அதாவது முதலொடு முதலும், சினையொடு சினையும், முதலொடு சினையும் சினையொடு முதலும் உவமைக்குரியன எனினும் அவை மரபு வழுவாதிருக்க வேண்டும் என்பதாம்.

### சுட்டிக் கூறா உவமை

சுட்டிக் கூறா உவமம் ஆயின்
பொருளெதிர் புணர்த்துப் புணர்த்தன கொளலே. 1224



ஒன்றைக் குறித்துச் சுட்டிக் காட்டாத உவமையாக இருக்குமானால், உவமச் சொல்லின் பொருளுக்குப் பொருந்த உவமிக்கப்படும் சொல் வினை, பயன், மெய், உரு என்னும் உவமை தோன்றும் இடம் நான்கினுள், சுட்டிக் கூறா உவமப் பொருள் புரிந்து கொள்ளப்படும் (கொளலே)

### உவமைச் சிறப்பு

உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும். 1225

உவமானமும் அதன் பொருளும் ஒத்த தன்மை உடையதாக இருத்தல் வேண்டும்.

பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருள் அறு சிறப்பின் அஃது உவமம் ஆகும். 1226

உவமிக்கும் பொருளையே உவமையாகச் சொன்னாலும், மயங்கிய நிலை நீங்க அது அவ்வுவமை (அஃது) உயர்ந்த உவமையே ஆகும். மருள் அறு - குற்றமற்ற.

பெருமையும் சிறுமையும் சிறப்பின் தீராக்
குறிப்பின் வரூஉம் நெறிப்பாடு உடைய. 1227

ஒன்றின் பெருமை, அல்லது சிறுமை இரண்டில் எதைச் சொன்னாலும், அதை அதற்குரிய சிறப்பைக் குறைக்காத வகையில், சான்றோர் குறித்த வழிமுறை வழுவாது, கேட்போர் மனம் கொளச் சொல்லி வருதலே வழக்கில் உள்ளது. தீரா - நீங்கா. நெறிப்பாடு - வழக்கு.

## 2. உவம உருபுகள்

### பாகுபாடு

அவைதாம்,
அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப,



Scanned with CamScanner

என்ன, மான, என்றவை எனாஅ-
ஒன்ற, ஒடுங்க, ஒட்ட, ஆங்க,
என்ற, வியப்ப, என்றவை எனாஅ-
எள்ள, விழைய, விறப்ப, நிகர்ப்ப,
கள்ள, கடுப்ப, ஆங்கவை எனாஅ-
காய்ப்ப, மதிப்ப, தகைய, மருள,
மாற்ற, மறுப்ப, ஆங்கவை எனாஅ-
புல்ல, பொருவ, பொற்ப, போல,
வெல்ல, வீழ, ஆங்கவை எனாஅ-
நாட, நளிய, நடுங்க, நந்த,
ஓட, புரைய, என்றவை எனாஅ -
ஆறு - ஆறு அவையும், அன்ன பிறவும்
கூறும் காலைப் பல் குறிப்பினவே. 1228

அவைதாம் - அந்த உவம உருபுகள் தாம், 'அன்ன' என்பது முதல் 'புரைய' வரையிலும் உள்ள முப்பத்தாறுமாம் (ஆறு x ஆறு) இவையோடு மற்றுமுள்ள (அன்ன பிறவும், ஆரஅமர அனைய) பிற உவம உருபுகள் பேச்சு வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் பலவகையிலும் பயிலப்படுவனவாம். (பல் குறிப்பின)

### வினை உவமம்

'அன்ன' 'ஆங்க' 'மான' 'விறப்ப'
'என்ன' 'உறழ' தகைய நோக்கொடு
கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம். 1229

''அன்ன, ஆங்க, மான, விறப்ப, என்ன, உறழ, தகைய நோக்க'' என்னும் எட்டும் வினை உவமம் ஆகும். கண்ணிய - கருதிய.

எ.கா : எரிபரந்தன்ன ... கயநாடி யானையின் முகமலர்ந் தாங்கு என வரும்.



### அன்ன என் கிளவி பிறவொடும் சிவணும்

முந்தைய சூத்திரத்தில் சொல்லிய வினை உ... எட்டினுள், 'அன்ன' எனவரும் உவமைச் சொல், பிறவே... அதாவது வினை தவிர்த்து உள்ள மற்ற மூன்றான 'பயன்'... 'உரு' என்னும் மூன்றோடு பொருந்தியும் வரும் சிவ... பொருந்தும்.

எ.கா : மாரி அன்ன வண்கை (பயன்) பிறை... விளங்கெயிறு (மெய்) செவ்வானன்ன மேனி (உரு)

### பயனுவமம்

எள்ள விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
என்றாங்கு எட்டே பயனிலை உவமம்.

'எள்ள', 'விழைய', 'புல்ல, பொருவ, கள்ள, ... வெல்ல, வீழ என்றுள்ள எட்டும், பயனிலை உவமம் ...

எ.கா : 'எழிலி வானம் எள்ளி', 'மழை விழை த... 'விண்பொரு புகழ்' என வரும்.

### மெய் உவமம்

கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய
ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப என்று
அப்பால் எட்டே மெய்ப்பால் உவமம்.

கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய, ஒட்ட, ஒடுங்க... நிகர்ப்ப என்னும் எட்டும் மெய் உவமமாகும்.

எ.கா : 'நீர்வார் நிகர் மலர் கடுப்பஃவே... பணைத்தோள்' 'உரல் புரை பாவடி' எனவரும்.

### உருபு உவமம்

போல மறுப்ப ஒப்ப காய்த்த
நேர வியப்ப நளிய நந்த என்று
ஒத்துவரு கிளவிஉருவின் உவமம். 1233

போல, மறுப்ப, ஒப்ப, காய்த்த, நேர, வியப்ப, நளிய நந்த என இணைந்து வரும் (ஒத்துவரும்) சொற்கள் (கிளவி) எட்டும் உருபு உவமத்தனவாம்.

எ.கா : 'பொன்போல் பொலியும்', 'மணி நிறம் மறுத்த மலர் பூங்காயா', 'தண்டளிர் வியப்ப' என வரும்.

தத்தம் மரபில் தோன்றுமன் பொருளே. 1234

வினை உவமம், பயனுவமம், மெய்யுவமம், உருபுவமம் என்று வகுத்தும் தொகுத்தும் சொல்லப்பட்டவை அல்லாமல், காலவழக்கிற்கு ஏற்ப, அவை தத்தம் இயல்புக்கேற்ற பொருளோடு பொருந்தியும் நிற்கும்.

## 3. உவமை மரபு

### வேறு உவமைப் பாகுபாடு

நால் இரண்டாகும் பாலுமார் உண்டே. 1235

வினை, பயன், மெய், உரு என நான்காகப் பகுக்கப்பட்ட உவமை எட்டாகப் பாகுபாடு (பாலுமார்) செய்யப்படுதலும் உண்டு. அவை - வினை, வினைக்குறிப்பு (வினை), நன்மை, தீமை (பயன்) வடிவு, அளவு (மெய்), நிறம், குணம் (உரு) என எட்டுமாம்.

### பெருமை - சிறுமை, உவமை

பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்
வழி மருங்கு அறியத் தோன்றும் என்ப. 1236



பெருமை, சிறுமைக்கு ஒப்புமை காட்டவரும் உவமை எட்டு மெய்ப்பாடுகளான, நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை வழித் தோன்றும் என்பது புலவர் கூற்று.

### உவமையும் பொருளும்

உவமப் பொருளின் உற்றது உணரும்
தெளி மருங்கு உளவே திறத்துஇயல் ஆன. 1237

உவமப் பொருள் உற்றதான உவமிக்கப்பட்டதனை தெளிவாக உணர்ந்தறியும் பகுதி (தெளி மருங்கு) அதற்கான இலக்கண அறிவுத்திறன் வழிப்பட்டதாகும் (திறத்துஇயல் ஆன)

உவமப் பொருளை உணரும் காலை
மரீஇய மரபின் வழக்கொடு வருமே. 1238

உவமையால் உவமிக்கப்பட்ட பொருளை அறியும்போது (உணரும் காலை) உலகியலில் மருவி (மரீஇய - திரிந்து) வழங்கி வரும் வழி (மரபின்) உணர்ந்து அறியப்படும்.

### இரட்டைக் கிளவி

இரட்டைக் கிளவி இரட்டை வழித்தே. 1239

இரட்டைக் கிளவி (இரண்டு சொல்) உவமை இரண்டு சொல்லாக வருதல் போல உவமிக்கப்படும் பொருளும் இரட்டித்து இரண்டாக வரும் (இரட்டை வழித்தே)

## 4. உள்ளுறை உவமம்

பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்னை மரபில் கூறுங் காலைத்
துணிவொடு வரூஉம் துணிவினோர் கொளினே. 1240

உவமையும், உவமிக்கப்படும் பொருளும் வேறு வேறாகத் தோன்றாது (பிறிதொடு படாது) உவமை தோன்றும் இடத்திலேயே உவமிக்கப்பட்ட பொருளையும் கண்டு (பிறப்பொடு நோக்கி) இதற்கு இது பொருளென வழிவழிவரும் மரபு அறிந்து (மரபில் கூறும் காலை) தெளிவுடையோர் கூறும் பொருளோடு பொருந்தி நிற்பது உள்ளுறை உவமம் ஆகும்.

### உவமப் போலி

**உவமப் போலி ஐந்தென மொழிப.** 1241

உவமப் போலியாகிய உள்ளுறை உவமம் ஐந்து வகையாகும் எனச் சொல்லுவர்.

### உள்ளுறை உவம வகை

**தவல் அரும் சிறப்பின் அத்தன்மை நாடின்**
**வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்**
**பிறப்பினும் வரூஉம் திறத்த என்ப.** 1242

உயர்வான சிறப்பினை உடைய உள்ளுறை உவமை பற்றி ஆராய்வோமானால் (அத்தன்மை நாடின்) வினை, பயன், உறுப்பு, உரு, பிறப்பு என்னும் ஐந்து இடத்தும் வரும் இயல்புடையது (திறத்த) என்பர் (என்ப). தவல் - குற்றம். அரும் - அற்ற. சிறப்பு - பெருமை. குற்றமற்ற சிறப்பு என்பது நல்லதாகிய சிறப்பெனச் சொல்லப்பட்டது. நல்லதான சிறப்பாவது, உள்ளுறை உவம வகை ஐந்தும், செய்யுளில் சிறப்பிடம் பெறுமாதலால் தவலரும் சிறப்பெனும் அடைமொழி ஏற்றது.

### தலைவி கூற்று

**கிழவி சொல்லின் அவள் அறி கிளவி.** 1243

தலைவி (கிழவி)ய உள்ளுறை உவம் தோன்றும் இடமறிந்து பொருள் கொள்ளச் சொன்ன தலைப்புச் சூத்திரத்திற்கு



ஏற்பத் தலைவி உரைக்கும் இடத்து, அவளறிந்த... பற்றியே உரைப்பாள். அவள் அறிகிளவி - தலை... பொருள்.

### தோழி கூற்று

**தோழிக்கு ஆயின் நிலம் பெயர்ந்து உரையாது**

தோழி கூற்றாக உள்ளுறை உவமம் வருமிடத்... சார்ந்த நிலத்துகுரியன குறித்துக் கூறுதல் அல்லாது... பொருள் பற்றிப் பேசுதல் இல்லை.

### தலைவன் கூற்று

**கிழவோர்க்கு ஆயின் உரனொடு கிளக்கும்.**

தலைவன் கூற்றாக உள்ளுறை உவமம் வெ... ஆயின், அது அவன் அறிவாற்றல் (உரன்) விளங்கக்... கிழவன் - தலைவன். கிளக்கும் - சொல்லும்.

**ஏனோர்க்கு எல்லாம் இடம் வரைவு இன்றே**

ஏனோர் - மற்றையோர் (செவிலி, நற்றாய் போ... இவர்களுக்கெல்லாம் உவமை கூறல் வரையறுக்க...

### இதில் இருவகை

**இனிது உறுகிளவியும் துணி உறு கிளவியும்**
**உவம மருங்கில் தோன்றும் என்ப.**

இனிது உறுகிளவி (மகிழ்ச்சி அல்லது இன்... சொல்) துனிஉறுகிளவி (துன்பந்தரும் சொல்) என்ற... இரண்டிடத்தும் உள்ளுறை உவமம் தோன்றும் என்ப...

### தலைவிக்கு இரண்டிடம்

**கிழவோட்கு உவமம் ஈரிடத்து உரித்தே.**

கிழவோட்கு - தலைவிக்கு இன்பதும் துன்பம் என்னும் இரண்டிடத்தும் (ஈரிடத்தும்) உவமை கூறல் உரியதாம் (மற்ற இடங்களில் கூறுதல் இல்லையாம்)

### தலைவனுக்குத் தடை இல்லை

**கிழவோர்க்கு ஆயின் இடம் வரைவு இன்றே.** 1249

கிழவோர்க்கு - தலைவனுக்கு இந்த வரையறைகள் இல்லை. இடம்வரைவு - கட்டுப்பாடு அல்லது எல்லை, வரைமுறை.

### தோழிக்கும்... செவிலிக்கும்

**தோழியும் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்**
**கூறுதற்கு உரியர் கொள் வழிஆன.** 1250

தோழிப் பெண்ணும், செவிலித் தாயும் உவமை கூறும் போது பொருத்தமான இடம் அறிந்து (பொருந்து வழி நோக்கி) கேட்பவர் மனம் கொளக் (கொள்வழி) கூறுதற்கு உரியர்.

## 5. புறனடை

### வேறுபட வரும் உவமை

**வேறுபட வந்த உவமத் தோற்றம்**
**கூறிய மருங்கில் கொள்வழிக் கொளாஅல்.** 1251

இதுவரை கூறியவற்றிற்கு வேறாக வரும் உவமைகள், (வேறுபட வந்த உவமத் தோற்றம்) சொல்லிவந்த இலக்கண வரைமுறைக்கு ஏற்பக் கொள்ளுமிடமறிந்து (கொள்வழி) கொள்ளுதல் (கொளாஅல்) வேண்டும்.

**ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே.** 1252



உவமையை உவமிக்கப்படும் பொருளிலிருந்து விலக்கிக். (ஒரீஇக்) கூறுவதும் மரபு வழி வந்து (மரீஇய) பொருந்திய தன்மைத்தே.

**உவமத் தன்மையும் உரித்து என மொழிப**
**பயனிலை புரிந்த வழக்கத் தான.** 1253

உவமை உவமிக்கப்படும் பொருளோடு தோன்றி வருதலே அல்லாமல் உவமையின் பயன் விளக்கம் பெறக் கூறும் முறை வழக்கிலுள்ளதே ஆகும்.

**தடுமாறு உவமம் கடிவரை இன்றே.** 1254

உவமையும் பொருளும் வேறுபட வருவதும், உவமையே பொருளாகவும், பொருள் உவமையாகவும் வருவதும் தடுமாறு உவமம். இது நீக்கத்தக்கது இல்லை. கடிவரை - விலக்கத்தக்கது

**அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே**
**நிரல் நிறுத்து அமைத்தல் நிரல் நிறை சுண்ணம்**
**வரன்முறை வந்த மூன்று அலங் கடையே.** 1255

உவமைகள் பல அடுக்கி வருதல், ஒரு பொருளுக்குப் பல உவமைகள் சொல்லுதல் (நிரல்) உவமிக்கப்படும் பொருளை வேறுபட அமைத்தல் (நிறுத்த அமைத்தல்) என்னும் இம்மூன்றும் அல்லாத இடத்து, (மூன்று அலங்கடை) அடுக்கிய உவமை விலக்கப்படும். விடுதல் - நீங்குதல். பண்பே - முறையாகும்.

Scanned with CamScanner

## 8. செய்யுளியல்

### 1. செய்யுள் உறுப்புக்கள்

செய்யுள் இலக்கணம், பாட்டு அமைப்பு, பா வகைபற்றிக் கூறும் இயல் செய்யுள் இயல்.

### செய்யுள் உறுப்புக்கள்

'மாத்திரை, எழுத்து இயல், அசை வகை, எனாஅ;
யாத்த சீரே, அடி, யாப்பு, எனாஅ;
மரபே, தூக்கே, தொடை வகை, எனாஅ;
நோக்கே, பாவே, அளவு இயல், எனாஅ;
திணையே கைகோள், கூற்றுவகை, எனாஅ;
கேட்போர், களனே, கால வகை, எனாஅ;
பயனே, மெய்ப்பாடு, எச்ச வகை, எனாஅ;
முன்னம், பொருளே, துறை வகை, எனாஅ;
மாட்டே, வண்ணமொடு, யாப்பு இயல் வகையின்
ஆறு தலை இட்ட அந் நால் - ஐந்தும் -
அம்மை, அழகு, தொன்மை, தோலே,
விருந்தே, இயைபே, புலனே, இழைபு, எனாஅ;
பொருந்தக் கூறிய எட்டொடும் தொகைஇ-
நல் இசைப்புலவர், 'செய்யுள் உறுப்பு' என
வல்லிதின் கூறி, வகுத்து உரைத்தனரே. 1256

மாத்திரை அளவு, எழுத்துக்கள் தொகுதி, அசை உறுப்பு, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவுஇயல், திணை, கைக்கோள், கூற்று, கேட்போர், களம், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், வகை, துறை, மாட்டு, வண்ணம் என்னும் இருபத்து ஆறும் (ஆறுதலையிட்ட அந் நால் ஐந்து (6+4x5 = 20 = 26)) இருபத்து ஆறும், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு,



புலன், இழைபு என்னும் எட்டும் சேர வரும் முப்பத்து... இனிய செய்யுளுக்கான இலக்கண உறுப்பென... கூறியுள்ளனர். வளமை சான்ற புலமையாளர்கள்...

மாத்திரை - எழுத்து ஒலிக்கு அளவு. கண்... பொழுது அல்லது கை நொடிப் பொழுது ஒரு ... எழுத்தியல் - குறில் நெடில் வல்லினம் மெல்லினம் ... அசை - ஓசைநிரை. சீர் -சொல் அடுக்கு. அடி - ... யாப்பு - சொற்கட்டு. மரபு - சொல்லமைப்பு முறை... பாட்டின் ஓசை. தொடை - பாட்டின் ஓசை உறுப்பு... பாட்டின் இசை. பா - பாட்டு வகை. வெண்பா, கலிப்... அளவு - அடியளவு. திணை, ஐந்திணை, கைக்கிளை... திணை, கைக்கோள் - களவும் கற்புமான அகத்திணை ஒ... கூற்று - பேச்சு, தலைவி, தோழி, தலைவன், தோழன்... கேட்போர் - கேட்பவர்கள். களம் - கூடல் நிகழிடம்... நிகழ்காலம். எதிர்காலம், இறந்தகாலம். பயன் - ... மெய்ப்பாடு - உணர்வு வெளிப் பாடு. எச்சம் - மறை... முன்னம் - முந்தியது. பொருள் - கருப்பொருள்... ஒழுங்குமுறை. மாட்டு - பொருள் விரிப்பு. வண்ணம் - ... அம்மை - ஐந்தடிக்குள்ளானது. அழகு - திரி சொல். தொ... - பழமை. தோல் - இழுமென் ஓசை. விருந்து - புதுமை. இ... - ஒத்து வருதல். புலன் - கருத்து, இழைதல் - ஒத்த ஓசை உ... எழுத்துக்கள் இணைந்து வருதல். எனாஅ - என்றுள்ள...

### 2. மாத்திரை

**அவற்றுள்**
**மாத்திரை அளவும் எழுத்தியல் வகையும்**
**மேல் கிளந்தன்ன என்மனார் புலவர்.**

அவற்றுள் - மேலே சொன்ன செய்யுள் உறுப்புக்... மாத்திரை அளவு, எழுத்து வகை என்னும் இரண்டும் எழு... காரத்தில் கூறப்பட்டுள்ள படியே என்பர் புலவர் பெரு...

## 3. அசை

### நேர் - நிரை

**குறிலே நெடிலே குறில் இணை குறில் நெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையும் என்றிசின் பெயரே. 1258**

குறிலும், நெடிலும், தனித்தும், குறிலோடு குறில் (இரண்டு குறில்) இணைந்தும், குறிலை அடுத்து நெடில், அல்லது அவை ஒற்றடுத்து வரும்போது, அதன் உண்மை இயல்பை நோக்க (மெய்ப்பட நாடி), அவை நேரசை என்றும் நிரை அசை என்றும் பெயர் பெறும்.

**இருவகை உகரமொடு இயைந்தவை வரினே
நேர்பும் நிரையும் ஆகும் என்ப
குறில்இணை உகரம் அல்வழி யான. 1259**

'குற்றியலுகரம்', 'முற்றியலுகரம்' என்னும் இரண்டு வகையான உகரத்தோடு, நேர் அசையும், நிரை அசையும் சேர்ந்து வரும்போது, (இயைந்தவை வரின்) அவை நேர்பசை நிரைபு அசை என்றழைக்கப் பெறும் (என்ப) இந்த இரண்டு வகை உகரமும் குறிலோடு பொருந்தி வராத இடத்து இது விதியாகும். அப்போது அது நேர்பசை ஆகாது. அல்வழி - அல்லாத இடத்து.

### இயல் அசை உரி அசை

**இயல் அசை முதல் இரண்டு ஏனைய உரிஅசை. 1260**

முதலிரண்டான 'நேர் அசை, நிரை அசை' என்னுமிரண்டும் இயல் அசை எனப்படும். ஏனைய - மற்றதான நேர்பு, நிரைபு அசைகள் இரண்டும் உரி அசை ஆகும்.



### தனிக்குறில் அசையாகாத இடம்

**தனிக்குறில் முதல் அசை மொழி சிதைத்து ஆகாது. 1261**

தனிக் குற்றெழுத்து, முதலசையான நேரசை ஆவதில்லை, தொடர்மொழியில் விட்டிசைக்கும் போது.

### குற்றியலுகரம்

**ஒற்று எழுத்து இயற்றே குற்றியல் உகரம். 1262**

ஒற்று எழுத்து - புள்ளி உடைய மெய் எழுத்து. இதன் இயல்பினதே (இயற்றே) குற்றியல் உகரம். இதன் பொருள் ஒற்றெழுத்து மாத்திரை எண்ணிக்கை - அலகு பெறாதது போலவே, குற்றியலுகரமும் அலகு பெறாது.

### முற்றியலுகரம்

**முற்றியல் உகரமும் மொழி சிதைத்துக் கொளாஅ
நிற்றல் இன்றே ஈற்று அடி மருங்கினும். 1263**

முற்றியல் உகரம் வருமொழியோடு கூடித் திரியும் நிலைகொள்ளாது (சிதைத்தக் கொளாஅ). ஈற்றடியிலும் (ஈற்றடி மருங்கினும்) தனி அசையாகி நிற்காது (நிற்றல் இன்றே).

### குற்றியலுகரமும் - முற்றியலுகரமும்

**குற்றியல் உகரமும் முற்றியல் உகரமும்
ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே. 1264**

குற்றியல் உகரம், முற்றியல் உகரம் இரண்டும் ஒற்றுடன் சேர்ந்து தனி அசை பெறும்.

### அசையும் - சீரும்

**அசையும் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தல் வல்லோர் ஆறே. 1265**

Scanned with CamScanner

அசையையும், சீரையும், இசையோடு பொருந்தச் சேர்த்து, பொருளுணர்த்த வகுத்ததே செய்யுள் இலக்கண நெறிமுறை ஆகும். இசை - இங்கு ஓசை வல்லோர் - மொழி அறிஞர்கள் ஆறு - வழிமுறை.

### 4. சீர்

**ஈர் அசை கொண்டு மூ அசை புணர்த்தும்**
**சீர் இயைந்து இற்றது சீர் எனப்படும்.** 1266

இரண்டு அசை கொண்டு இணைந்தும், மூன்றசையோடு சேர்ந்தும் சொற்கள் ஓசை பொருந்த வருவது சீர் எனப்படும்.

### இயற்சீர் - உரிச்சீர்

**இயலசை மயக்கம் இயற்சீர் ஏனை**
**உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்.** 1267

இயலசை இணைந்து வருவது இயற்சீர் ஆகும். உரி அசை சேர்ந்து வருவது உரிச்சீர் எனப்படும். நேர் நேர், நிரை நேர், நிரைநிரை. நேர்நிரை - இயற்சீர். நேர்பு நேர்பு, நிரைபு நேர், நிரைபு, நிரைபு, நேர் நிரைபு - ஆசிரிய உரிச்சீர்.

எ.கா : வாய்க்கால். வரகு சோறு

**முன்நிரை உறினும் அன்ன ஆகும்.** 1268

நேர்பு அசை, நிரைபு அசை,க்குப் பின்வரும் நிரை அசையும் ஆசிரிய உரிச்சீர் ஆகும்.

எ.கா : குளத்துமடை.

**நேரவண் நிற்பின் இயற்சீர் பால.** 1269

உரி அசைக்குப் பின்னே நேர் அசை வருமானால் அது இயற்சீர் இயல்பினைப் பெறும்.

எ.கா : ஆற்றுக்கால்



**இயல் அசை ஈற்றுமுன் உரிஅசை வரினே**
**நிரை அசை இயல ஆகும் என்ப.**

இயலசை முடிவின் முன்பாக உரி அசை வருமானால் வந்தால் கொள்வது போல - இயற்சீர் ஆகக் கொள்ளல் வே என்பர்.

எ.கா : மாங்காடு.

### அசையாகும் அளபெடை

**அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே**

அளபெடை பொதுவாக அசையாகாது. என் உயிரளபெடை அசையாகி வருதலும் உண்டு. ஆகலும் உம்மை அரிதாக இது நிகழும் என்பதைக் குறித்தது.

**ஒற்று அளபெடுப்பினும் அற்று என மொழிப**

ஒற்று அளபெடுத்தாலும் உயிரளபெடை போல அ பெறும் என்று சொல்வர். அற்று - அத்தன்மையது எ-க டண்ணணெனக் கண்டும் கேட்டும் (மலைபடு)

### உரிச்சீர்

**இயற்சீர் இறுதிமுன் நேர் அவண் நிற்பின்**
**உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப.**

இயற்சீர் இறுதிக்குப் பின் நேர் அசை வந்து நின் வரும் மூவசைச் சீர் நான்கும் வெண்பா உரிச்சீர் கூறுவர்.

எ.கா : புலிவாழ்கான்.

### வஞ்சிச்சீர்

**வஞ்சிச்சீர் என வகை பெற்றனவே**
**வெண்சீர் அல்லா மூஅசை என்ப.**

Scanned with CamScanner

வஞ்சிச்சீர் என்று வகைப்படுத்தப்பட்டவை. முன் சூத்திரத்தில் சொல்லிய வெண்பா உரிச்சீர் அல்லாத மூவசைச்சீர் என்று கூறுவர்.

**தன்பால் அல்வழி தான் அடைவு இன்றே.** 1275

வஞ்சி உரிச்சீர் வஞ்சிப்பாவைத் தவிர்த்து மற்ற பாவகை எதனுடனும் வராது. தன்பால் - வஞ்சிப்பா. அல்வழி வேறு இடங்கள் அடைவு - அடைதல். மற்றபாவகை ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா.

**வஞ்சி மருங்கின் எஞ்சிய உரிய.** 1276

வஞ்சி மருங்கில் - வஞ்சிப்பாவினுள், எஞ்சிய - மற்றைய தான ஆசிரிய உரிச்சீரும் வெண்பா உரிச்சீரும் வருதற்கு உரியவாம்.

## வெண்பாச்சீர்

**வெண்பா உரிச்சீர் ஆசிரிய உரிச்சீர்**
**இன்பா நேரடிக்கு ஒருங்கு நிலை இலவே.** 1277

வெண்பா உரிச்சீர், ஆசிரிய உரிச்சீர் இரண்டும் ஆசிரியப் பாவுக்கு ஒப்ப வராது (நேரடி ஒருங்கு நிலை) இன்பா - ஆசிரியப்பா.

## கலிப்பாச் சீர்

**கலித்தளை மருங்கில் கடியவும் பெறாஅ** 1278

முன் சூத்திரத்தில் சொன்ன வெண்பா உரிச்சீர், ஆசிரிய உரிச்சீர் இரண்டும் கலித்தளை வரும் இடத்தில், விலக்கப்பட மாட்டாது. கடிய - விலக்க. பெறா - உரியவையாகா. அ- அசை.



**கலித்தளை அடிவயின் நேர் ஈற்று இயற்சீர்**
**நிலைக்கு உரித்து அன்றே தெரியுமோர்க்கே.** 1279

கலிப்பாவுக்கான கலித்தளை அடிகளில் நேர் ஈற்று இயற்சீர் (தேமா, புளிமா என்னும் இரண்டு இயற்சீரும்) வரும் நிலை (நிலைக்கு) உடையாதாகாது (உரித்து அன்று) என்பது, புலமையாளர்க்குப் (தெரியுமோர்க்கு) தெரிந்ததே ஆகும்.

**வஞ்சி மருங்கினும் இறுதி நில்லா** 1280

முன் சூத்திரத்தில் சொன்ன இயற்சீர் இரண்டும் வஞ்சிப்பா முடிவிலும் வராது.

## சீர் ஆகும் அசை

**இசை நிலை நிறைய நிற்குவது ஆயின்**
**அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே** 1281

செய்யுளுக்கு ஓசை நயம் முக்கியம். இந்த ஓசை - இசை நிறைவுபடாது இருக்கும் இடங்களில், அசையாக வரும் சொல்லும் சீர் ஆகும் சிறப்புப் பெறும். இதைத் தவறென்று தள்ளிவிட மாட்டார்கள் (வரையார்) புலமையாளர்கள்.

**இயற்சீர்ப் பாற்படுத்து இயற்றினர் கொளலே**
**தளை வகை சிதையாத் தன்மையான.** 1282

ஓரசையாக வரும் சீர், தளை கெடாது வரும் இடத்து இயற்சீராகவே கொள்ள வேண்டும்.

## வெண்சீர்

**வெண்சீர் ஈற்றசை நிரைஅசை இயற்றே.** 128

வெண்சீர் ஈற்று அசை, தளைமுன் இயற்சீர் அசைநிரை ஈற் தன்மையதாகும்.



Scanned with CamScanner

இன்சீர் இயைய வருகுவது ஆயின்
வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே. 1284

இனிய ஓசைநயம் பொருந்த (இயைய) வருவதானால் வெண்பா உரிச்சீர் ஆசிரிய அடிக்கு வருவதை விலக்க மாட்டார்கள். வரையார் - விலக்கார்.

**வஞ்சிச்சீர்**

அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்
ஒன்றுதல் உடைய ஓரொரு வழியே. 1285

முன் சூத்திரத்தில் கூறியபடி - அதாவது இனிய ஓசைநயம் பொருந்த வருமிடத்து (மருங்கின்) வரும் வஞ்சி உரிச்சீரும் ஓரோர் இடத்து (ஓரொரு வழி) ஆசிரிய அடிக்கண் வரும். ஒன்றுதல் உடைய - பொருந்தி வருதல்.

## 5. அடி

நாற்சீர் கொண்டது அடி எனப்படுமே. 1286

நான்கு சீர் (நாற்சீர்) இணைந்து வருவது செய்யுள் அடி என்று சொல்லப்படும்.

**தொடை**

அடி உள்ளனவே தளையொடு தொடையே. 1287

ஒரு செய்யுள் அடியில் தளையும் தொடையும் இருக்கும்.

**தளையும் தொடையும்**

அடி இறந்து வருதல் இல் என மொழிப. 1288

இந்தத் தளையும் தொடையும் நான்கு சீர்ச் செய்யுளடிகளில் வருவதன்றி, அதை நீங்கி வருவது இல்லை என்று சொல்வர்.



**பாட்டெனப்படுவது**

அடியின் சிறப்பே பாட்டு எனப்படும்

ஒரு பாட்டின் சிறப்பு அதன் அடி அளவைக் கொ... போற்றப்படும். சீரும் தொடையும் செய்யுளுக்குச் சிறப்பு... றாலும், அடி அளவே அதற்குப் பாட்டென்னும் பெருமையெ... தரும்.

**குறள் அடி**

நால் எழுத்து ஆதி ஆக ஆறு எழுத்து
ஏறிய நிலத்தே குறளடி என்ப.

குறள் என்பதற்குக் குறுகிய குறைந்த என்பது பொரு... குறளடி செய்யுளில் மிகக் குறைந்த சொற்களைக் கொண்டது... எழுத்து முதல் (ஆதிஆக) ஆறு எழுத்துவரை, நான்கு ஐந்து... என்னும் மூன்று நிலைகளைக் கொண்டது குறளடி.

**சிந்துஅடி**

ஏழ் எழுத்து என்ப சிந்தடிக்கு அளவே
ஈர் எழுத்து ஏற்றம் அவ் வழியான.

ஏழு எழுத்துக்கள் சிந்தடிக்கு அளவென்று சொல்லு... மேலும் இரண்டு எழுத்துக்கள் கூட (ஈர் எழுத்து ஏற்றம்) ... எட்டு, ஒன்பது என வரும் மூன்று நிலைகளும் உண்டு சிந்தடி... ஏற்றம் - ஏற்கும் நிலை.

**அளவடி**

பத்து எழுத்து என்ப நேரடிக்கு அளவே
ஒத்த நால் எழுத்து ஏற்றல் அலங்கடையே.

பத்து எழுத்துக்கள் அளவடிக்கு அளவென்று ... மேலும் நான்கு எழுத்துக்கள் ஏற்கப் பதினான்கும் ... அலங்கடை - அல்லாதவிடத்து.

### நெடில் அடி

மூ ஐந்து எழுத்தே நெடிலடிக்கு அளவே
ஈர் எழுத்து மிகுதலும் இயல்பென மொழிப. 1293

மூன்றைந்து பதினைந்து நெடிலடிக்கு அளவு பதினைந்து எழுத்துக்களே. மேலும் இரண்டு எழுத்துக்கள் கூடி (ஈர் எழுத்து மிக) வருதலும் உண்டென்று சொல்லுவர்

### கழிநெடில் அடி

மூ ஆறு எழுத்தே கழிநெடிற்கு அளவே
ஈர் எழுத்து மிகுதலும் இயல்பு என மொழிப. 1294

மூ ஆறு - மூன்று ஆறு, பதினெட்டு எழுத்துக்களே கழிநெடில் அடிக்கு அளவாகும். மேலும் இரண்டு எழுத்துக்கள் கூட (ஈர் எழுத்து மிக) இருபது எழுத்துக்கள் அமைதலும் உண்டு.

### சீர் பெறும் அளவு

சீர் நிலைதானே ஐந்து எழுத்து இறவாது
நேர் நிலை வஞ்சிக்கு ஆறும் ஆகும் 1295

சீர் அளவு ஐந்து எழுத்துக்களுக்கு மேற்படாது (நேரசை முடிவில்) நிரை அசை இறுதியில் வருமானால், வஞ்சி உரிச்சீர் ஆறெழுத்துப் பெற்றும் வரும். இருபது எழுத்துக்களுக்கு மேற்பட்ட நாற்சீரடி இல்லை.

எழுத்து அளவு எஞ்சினும் சீர்நிலை தானே
குன்றலும் மிகுதலும் இல் எனமொழிப. 1296

செய்யுளடிகளில் அடிக்கு அடி எழுத்தின் அளவு குறைந்து வரலாம். ஆனால் சீர் அப்படியல்ல. குறைதலும் (குன்றல்) கூடுதலும் (மிகுதலும்) இல்லாது, வருவது சீர் என்று சொல்லுவர்.



### எண்ணப் படாத எழுத்துக்கள்

உயிர் இல் எழுத்து எண்ணப் படாஅ 1297
உயிர்த்திறம் இயக்கம் இன்மையான.

உயிர் இல் எழுத்து என்பது இங்கு உயிரில்லாத, அதாவது தான் தனித்து நின்று இயங்க இயலாதது, புள்ளி உடைய எழுத்து -மெய் எழுத்து. இம்மெய் எழுத்துக்கள் சீரில் இடம் பெறும்போது அவை எண்ணிக்கைக் கணக்குக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா. (இதே போல் குற்றியலுகரமும் குற்றியலிகரமும் ஆய்த எழுத்தும் கூட கணக்கிடப்படமாட்டா) ஒரு மாத்திரை அளவுள்ள உயிர் - உயிர்மெய் எழுத்துக்களே, எண்ணிக்கை கொள்ளும். உயிர்த்திறம் இயக்கம் - தானே தனித்தியங்கும் ஆற்றல்.

### பாட்டுக்கு அடி அளவு

வஞ்சி அடியே இருசீர்த்து ஆகும். 1298

வஞ்சிப்பாவுக்கு இருசீர் அடி உரித்தானது

### வஞ்சி அடிச்சீர்

தன்சீர் எழுத்தின் சின்மை மூன்றே. 129

வஞ்சி உரிச்சீரின் குறைந்த அளவு மூன்றெழுத்தே. குறை அளவு இது. அதிகபட்சமாக மூன்று. நான்கு, ஐந்து அ எழுத்துக்கள் ஏற்றும் வஞ்சி உரிச்சீர் வருதல் உண்டாம். தன் வஞ்சி உரிச்சீர். சின்மை - சிறுமை. குறைந்தபட்ச அளவு.

முச்சீரானும் வரும் இடன் உடைத்தே 1

வஞ்சிப்பாஅடி, மூன்று சீருடன் வருமிடமும் உண்டு

### கூன் ஆகும் அசை

அசை கூன் ஆகும் அவ்வயினான

Scanned with CamScanner

இருசீர்அடி, முடிச்சீர்அடி என வரும் இரண்டிலும் அசை கூனாகி வரும். கூன் என்பது செய்யுளில், அசை, சீர் அல்லது அடி தனித்து வருவது.

**கூன் ஆகும் சீர்**

**சீர் கூன் ஆதல் நேரடிக்கு உரித்தே** 1302

சீர் கூன் ஆகி வருதல் நேரடியாகிய அளவடிக்கு உரியதாம்.

**ஐவகை அடி**

**ஐவகை அடியும், விரிக்கும் காலை,**
**மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்,**
**எழுபது வகையின் வழு இல ஆகி,**
**அறுநூற்று இருபத்தைந்து ஆகும்மே.** 1305

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்று முன் கூறிய ஐந்து வகையான பா அடிகளையும் பற்றி விரித்துரைக்க வேண்டுமானால் அவை பொருள்வகை பொருந்த பதினேழு நிலத்து (நான்கு முதல் இருபது வரை) எழுபது வகை வழுக்கள் நீங்கி அறுநூற்று இருபத்தி ஐந்து ஆகும். பதினேழு நிலத்தும் ஆசிரியப்பா வரும். வெண்பாவும், கலிப்பாவும் எட்டு, எட்டு நிலங்களில் வரும். இம்முப்பத்து மூன்று நிலங்களிலும் ஆசிரியப்பாவினுள் இயற்சீர் ஆசிரிய உரிச்சீரும், வெண்பாவினுள் ஆசிரிய உரிச்சீரும், கலிப்பாவில் நேர் இயற்சீரும், ஆசிரிய உரிச்சீர் வெண்சீர் தளை கொள்ளும் வழு. எழுபது என்று கூறுவர். அடி அறுநூற்று இருபத்தைந்து என்பது ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா என மூன்றிற்கும் உரியதாம். ஆசிரிய அடி முந்நூற்று இருபத்து நான்கு. வெண்பா அடி நூற்று எண்பத்து ஒன்று. கலிஅடி நூற்றிருபது ஆக அறுநூற்று இருபத்தைந்து.



**ஆங்கனம் விரிப்பின் அளவு இறந்தனவே**
**பாங்குற உணர்ந்தோர் பன்னும் காலை.**

சீர் அளவும் அடிவகைகளை விரித்துரைக்கப் பு... (ஆங்கனம் விரிப்பின்) அவை அளவு கடந்தும் போகும்... இதனை எல்லாம் நன்குணர்ந்த புலமையாளர்கள் ப... முழுமையாக. பன்னும் காலை - சொல்லும் போது.

**ஆசிரியப்பா**

**ஐவகை அடியும் ஆசிரியக்கு உரிய**

நாற்சீர் முதல் இருபது சீர்வரை இடம் பெறும் ஐந்து... பாட்டு அடிகளும் (குறளடி, சிந்தடி, அளவடி, நெடி... கழிநெடில்அடி) ஆசிரியப்பாவுக்கு உரியனவாம்.

**விரவி வரினும்...**

**விராஅய் வரினும் ஒரூஉ நிலை இலவே**

முன் சூத்திரத்தில் சொன்ன ஐந்து வகையான பாட்டு... ஆசிரியப்பாவில் கலந்து வரினும், அது நீக்கப்படுதல் இ... ஓரீஇ நிலை - ஒதுக்கும் நிலை.

**தன் சீர் - தளை**

**தன் சீர் வகையினும் தளைநிலை வகையினும்**
**இன்சீர் வகையினும் ஐந்து அடிக்கும் உரிய**
**தன்சீர் உள்வழித் தளை வகை வேண்டா**

ஆசிரிய உரிச்சீரும் தளையும் ஐந்து அடி... வாகும். தன்சீர் உள்ள இடத்தில் (உள்வழித்) த... கொள்ளுதல் இல்லை.

## ஆசிரியத் தளை

**சீர் இயை மருங்கின் ஓர் அசை ஒப்பின்**
**ஆசிரியத் தளைஎன்று அறியல் வேண்டும்.** 1308

சீர் இயை மருங்கின் - சீர் பொருந்தி நிற்க அதாவது ஈற்றசை பொருந்த வருஞ்சீரின் முதலசையோடு ஒத்து நின்றால் அது ஆசிரியத்தளை என்று அறிந்து கொள்ள வேண்டும். நிலைமொழி இயற்சீரொடு வருமொழியின் முதலசை நேராய் ஒன்றினால் அது நேரொன்றாசிரியத்தளை. நிரையாய் ஒன்றுமானால், அது நிரை ஒன்றாசிரியத்தளை.

## வஞ்சித்தளை

**குறள் அடி முதலா அளவடி காறும்**
**உறழ்நிலை இலவே வஞ்சிக்கு என்ப.** 1309

குறள்அடி முதலாக அளவடி ஈறாக வஞ்சி உரிச்சீர் வந்து திரியும் நிலையில், இயற்சீரும், ஆசிரிய உரிச்சீரும் ஆகும். உறழ்தல் - திரிதல்.

## வெண்பா

**அளவும் சிந்தும் வெள்ளைக்கு உரிய**
**தளை வகை ஒன்றாத் தன்மையான.** 1310

அளவடியும், சிந்தடியும் வெண்பாவுக்கு உரியவாம், அங்கு தளைவகை பொருந்தி வராததினால், பொருந்தி நெடிலடி சில வரும் என்பர். வெள்ளை - வெண்பா.

## கலிப்பா

**அளவடி மிகுதி உளப்படத் தோன்றி**
**இரு நெடில் அடியும் கலியிற்கு உரிய** 1311



முன் சொன்ன குறளடி முதலான ஐந்து பா அடிகளிலும் அளவடி மிகுதியாகி பதின்மூன்றெழுத்தும், பதினான்கெழுத்தும் இருபது எழுத்து வரையிலான நெடிலடியும், கழிநெடிலடியும் கலிப்பாவுக்கு உரியன. இருநெடில்அடி, நெடிலடி, கழிநெடிலடி

எ.கா : மரல்சாய மலைவெம்ப மந்திஉயங்க.

**நிரைமுதல் வெண்சீர் வந்து நிரை தட்பினும்**
**வரைநிலை இன்றே அவ் அடிக்கு என்ப.** 1312

அவ்அடிக்கு - கலிப்பா அடிக்கு நிரை முதலாகிய வெண்சீர் வந்து, நிரையாகத் தளைத்தல் விலக்கத்தக்கது அல்ல. வரைநிலை - நீக்கும் நிலை.

**விராஅய தளையும் ஒரூஉ நிலைஇன்றே** 1313

வேறு தளைகள் வந்து கலிப்பாவில் கலந்தாலும் (விராய தளை அது விலக்கப்பட வேண்டியதில்லை. (ஒரூஉ நிலை இன்றே) ஆசிரியத்தளை, வெண்தளையும், சில இடங்களில் வஞ்சித்தளையும் கலிப்பாவில் கலந்து வரும்.

## ஆசிரிய - வெண்பா அடிகள்

**இயற்சீர் வெள்ளடிஆசிரிய மருங்கின்**
**நிலைக்கு உரிமரபின் நிற்கவும் பெறுமே** 1314

இயற்சீர் வெள்ளடி வெண்பா அடிகள் ஆசிரியப்பாவுடன் நிற்கும் நிலைக்குரிய மரபோடு நிற்கவும் செய்யும்.

## ஐந்து சீர் அடி

**வெண்தளை விரவியும் ஆசிரியம் விரவியும்**
**ஐஞ்சீர் அடியும் உளஎன மொழிப.** 131

இயற்சீர் வெண்தளை கலந்தும், ஆசிரியத்தளை கலந்து ஐந்து சீர்கள் கொண்ட அடிகளும், ஆசிரியப்பாவில் வரும் எ சொல்வர்.

## 7. மரபு

மரபே தானும்
நாற்சொல் இயலான் யாப்புவழிப் பட்டன்று 1331

மரபு என்பது, பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் நான்கும் இயல்பாய் வழங்கும் முறையில் யாப்பு வழிப்பட்டதாகும். (நாற்சொல் என்பதற்கு இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனப் பொருள் சொல்வாரும் உண்டு. 'யாப்பு வழிப் பட்டன என்றும் பாடம் உண்டு'

## 8. தூக்கு

### அகவல்

**அகவல் என்பது ஆசிரியம்மே.** 1332

அகவல் ஓசை ஆசிரியப்பாவிற்கு உரியதாகும்.

### வெண்பா

**அதா அன்று என்ப வெண்பா யாப்பே** 1333

அதா அன்று - அகவல் ஓசை அன்று வெண்பா இலக்கணம். செப்பலோசை வெண்பாவுக்கானது.

### கலிப்பா

**துள்ளல் ஓசை கலி என மொழிப.** 1334

துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியதென்று சொல்லுவர்.

எ.கா : 'அரிதாய அறனெய்தி அருளியோர்க்கு அளித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்'
- எனவரும் கலித்தொகைப் பாடல்.



### வஞ்சிப்பா

**தூங்கல் ஓசை வஞ்சி ஆகும்.**

வஞ்சிப்பா தூங்கல் ஓசை உடையது ஆகும் தூங்... சீர்தோறும் அறுதியற்ற ஓசை உடையதாகி வரும் என்...

எ.கா : சுறை மறிவனது துறையெல்லாம்
இறைவின்பன இல் எல்லாம்
மீன் திரிவன கிடங்கெல்லாம்
தேன் தாழ்வன பொழில் எல்லாம்.

### மருட்பா

**மருட்பா ஏனை இருசார் அல்லது**
**தான் இது என்னும் தனிநிலை இன்றே.**

மருட்பா என்பது வெண்பா ஆசிரியப்பா ... இரண்டின் (இருசார்) உறுப்பாக வருவதால் அவ்... பாக்களுக்கும் உரிய ஓசையையே மருட்பா பெறுமே ... இதற்கென்று இதுதான் ஓசை (தான் இது) என்று தனிப்ப... (தனிநிலை) இல்லை.

**அவ் இயல் அல்லது பாட்டு ஆங்கு கிளவார்.**

இதுவரை கூறிய ஓசை வகைகளைக் கொண்டே புனைவர் மேலோர். இவையின்றிப் பாடல் இயற்றமாட்... (பாட்டு ஆங்கு கிளவார். கிளவார் - சொல்லார்).

### தூக்கின் இயல்பு

**தூக்கு இயல் வகையே ஆங்கு என மொழிப.**

தூக்கு என்னும் செய்யுள் உறுப்பு (ஓசை நய... சொல்லப்பட்ட பாவகை நான்கிடத்தும் வருவதாம்.

Scanned with CamScanner

## 9. தொடை

'மோனை, எதுகை, முரணே, இயைபு, என
நால் நெறி மரபின, தொடை வகை' என்ப. 1339

தொடை - இது செய்யுளின் சொல்லும் பொருளும் சிதையாது கட்டுவது. இது மோனைத்தொடை, எதுகைத் தொடை, முரண்தொடை, இயைபுத் தொடை என நான்கு வகைப்படும் என்பர்.

அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும் 1340

அளபெடைத் தொடையையும் இதனோடு சேர்க்க (தலைப்பெய) தொடை ஐந்தும் ஆகும்.

பொழிப்பும் ஒரூஉவும் செந்தொடை மரபும்
அமைந்தன தெரியின் அவையுமார் உளவே. 1341

முன் இரு சூத்திரங்களில் சொன்ன ஐந்து தொடைகளன்றி பொழிப்புத்தொடை, ஒரூஉத்தொடை, செந்தொடை என்பவையும் தொடைகளாய் அமையும் என்பதை அறிதல் வேண்டும்.

நிரல் நிறுத்து அமைத்தலும் இரட்டை யாப்பும்
மொழிந்தவற்று இயலான் முற்றும் என்ப. 1342

பொருள் வரிசை கெடாது நிறுத்தி அமைத்தலும், (நிரல் நிறுத்து அமைத்தலும்) ஓரடி முழுதும் ஒரு சொல்லே வரும் இரட்டைத் தொடையும் இயல்பாக முடியும் தொடை வகைகளாகும்.

எ.கா : நிரல் நிறுத்தம்

'பரவை மாக்கடல் தொகுதிரை வரவும்
பண்டைச் செய்தி இன்றிவன் வரவும்'

இரட்டைத் தொடை: ஒக்குமே ஒக்குமே ஒக்கும் ஒக்கும்



### மோனைத் தொடை

அடிதொறும் தலை எழுத்து ஒப்பது மோனை 1343

செய்யுள் அடி ஒவ்வொன்றிலும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனைத் தொடை.

### எதுகைத் தொடை

அஃது ஒழித்து ஒன்றின் எதுகை ஆகும் 1344

அஃது ஒழித்து - அதாவது அடிதோறும் முதல் எழுத்து ஒன்றாது இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.

எ.கா : மாயோன் மேய்காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
(தொல்காப்பியம்)

### கிளை எழுத்துக்கள்

ஆஇரு தொடைக்கும் கிளை எழுத்து உரிய 1345

ஆஇருதொடை - அந்த இரண்டு தொடை. அதாவது முன் சொன்ன மோனைத் தொடை எதுகைத் தொடை இரண்டிற்கும், முதல் எழுத்தும் இரண்டாம் எழுத்தும் முன்னிரு சூத்திரங்களில் சொல்லியபடி ஒன்றி வருவதே அல்லாமல் இன எழுத்துக்கள் ஒன்றி வருதற்கும் உரியன. அஆஐ, இஈஎ, உ, ஊ, ஒ; இவை ஒன்றுக்கொன்று இன எழுத்துக்களாம்.

### முரண்தொடை

மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே. 1346

சொல், பொருள் மாறுபட வரும் செய்யுள் அடி முரண்தொடை ஆகும்.



Scanned with CamScanner

## 18. வண்ணம்

வண்ணம் தானே நால் ஐந்து என்ப. 1459

வண்ணம் - இசைப்பாட்டு. இது இருபது வகைப்படும்.

### அவற்றின் பெயர்

அவைதாம்
பா அ வண்ணம் தா அ வண்ணம்
வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்
இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்
நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்
சித்திர வண்ணம் நலிபு வண்ணம்
அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்
ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்
எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்
தூங்கல் வண்ணம் ஏங்கல் வண்ணம்
உருட்டு வண்ணம் முடுகு வண்ணம் என்று
ஆங்கு என மொழிப அறிந்திசி னோரே. 1460

பா அ வண்ணம் தொடங்கி முடுகு வண்ணம் முடிய உள்ள இவ்விருபதுமே, வண்ணங்களின் தொகையும் வகையும் எனக் கூறுவர் இலக்கணம் அறிந்தோர்.

### பாஅ வண்ணம்

அவற்றுள்
பா அ வண்ணம்
சொற்சீர்த்து ஆகி நூல் பால் பயிலும் 1461

அவற்றுள் - வண்ணப்பாக்கள் இருபதினுள் பா அ வண்ணம் சொற்சீரடி கொண்டு நூலின் கண் வரும்.



### தா அ வண்ணம்

தா அ வண்ணம்
இடையிட்டு வந்த எதுகைத்து ஆகும். 1462

தா அ வண்ணம் இடையிட்டு வரும் எதுகையால் வரும்.

### வல்லிசை வண்ணம்

வல்லிசை வண்ணம் வல்எழுத்து மிகுமே 1463

வல்லிசை வண்ணம் வல் எழுத்து மிகப் பெறுவது.

### மெல்லிசை வண்ணம்

மெல்லிசை வண்ணம் மெல்எழுத்து மிகுமே. 1464

மெல் எழுத்து மிகுந்து வருவது மெல்லிசை வண்ணமாம்.

### இயைபு வண்ணம்

இயைபு வண்ணம் இடை எழுத்து மிகுமே. 1465

இடை எழுத்து மிகப் பெற்று வருவது இயைபு வண்ணம்.

### அளபெடை வண்ணம்

அளபெடை வண்ணம் அளபெடை பயிலும் 1466

அளபெடை பொருந்த வருவது அளபெடை வண்ணம்.

### நெடுஞ்சீர் வண்ணம்

நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும் 1467

நெட்டெழுத்து மிகுந்து வருவது நெடுஞ்சீர் வண்ணம்.

### குறுஞ்சீர் வண்ணம்

குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்து பயிலும் 14

குற்றெழுத்தாகிய குறில் மிக வருவது குறுஞ்சீர் வண்ணம்

## சித்திர வண்ணம்

சித்திர வண்ணம்
நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருமே 1469

நெடிலும் குறிலும் சேர்ந்து வருவது சித்திரவண்ணம்.

## நலிபு வண்ணம்

நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும் 1470

ஆயுத எழுத்து அமைய வருவது நலிபு வண்ணம்.

## அகப்பாட்டு வண்ணம்

அகப்பாட்டு வண்ணம்
முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே. 1471

அகப்பாட்டு வண்ணம் ஈற்றடி இடையடியாக முடியாத் தன்மை முடிந்ததன் மேல் வருவது.

## புறப்பாட்டு வண்ணம்

புறப்பாட்டு வண்ணம்
முடிந்தது போன்று முடியா தாகும் 1472

முடிந்ததே போல் நின்று முடியா நிலை நிற்பது புறப்பாட்டு வண்ணம் ஆகும்.

## ஒழுகு வண்ணம்

ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும் 1473

ஓசை ஒழுகி வர அமைந்தது ஒழுகு வண்ணம்.

## ஒரூஉ வண்ணம்

ஒரூஉ வண்ணம் ஒரூஉத் தொடை தொடுக்கும். 1474



தொடை இயல்பு நீங்கத் தொடுக்கும் செந்தொ
வருவது ஒரூஉ வண்ணம்.

## எண்ணு வண்ணம்

எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்

எண்ணு வண்ணமாவது அடி எண் பயின்று வருவது

## அலைப்பு வண்ணம்

அலைப்பு வண்ணம் அறுத்து அறுத்து ஒழுகு

அலைப்பு வண்ணம் விட்டு விட்டுச் சேரும் தன்மைய

## தூங்கல் வண்ணம்

தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்

தூங்கல் ஓசை கொள்ளும் தூங்கல் வண்ணம்
பயிலவரும்.

## ஏந்தல் வண்ணம்

ஏந்தல் வண்ணம்
சொல்லிய சொல்லின் சொல்லியது சிறக்கும்

சொல்லும் சொல்லாலே சொல்லும் பொருள்
வருவது ஏந்தல் வண்ணம்.

## உருட்டு வண்ணம்

உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும்

அராகம் தொடுக்க உருட்டிச் சொல்ல வருவது
வண்ணம்.

Scanned with CamScanner

## 9. மரபியல்

### 1. பொது மரபு

செய்யுள் இலக்கணத்தில் மரபெனச் சொல்லப்படுவது போல, மனிதர் விலங்கு பறவைகள் பெயர் மரபு விளக்கும் இயல், மரபியல் எனப்பட்டது.

### இளமைப் பெயர்கள்

**மாற்ற அரும் சிறப்பின் மரபு இயல் கிளப்பின்**
**பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்**
**கன்றும் பிள்ளையும் மகவும் மறியும் என்று**
**ஒன்பதும் குழவியொடு இளமைப் பெயரே.** 1491

மாற்ற அரும் சிறப்பு - விலக்க முடியாத அல்லது மாற்றுதற்கு அரிதான அதாவது, இன்றியமையாச் சிறப்புடைய மரபிலக்கணத்தைச் சொல்லின்; (கிளப்பின்) பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி மற்றும் குழவி என்பதொடு இளமைப் பருவம் குறிக்கும் பெயர்கள் ஒன்பதாம்.

### ஆண்பால் பெயர்கள்

**எருதும் ஏற்றையும் ஒருத்தலும் களிறும்**
**சேவும் சேவலும் இரலையும் கலையும்**
**மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்**
**போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்**
**யாத்த ஆண்பால் பெயரென மொழிப.** 1492

எருது, ஏற்றை, ஒருத்தல், களிறு, சே, சேவல், இரலை, கலை, மோத்தை, தகர், உதள், அப்பர், போத்து, கண்டி கடுவன்; என்னும் பதினைந்தும் இன்னும் இதுபோல் வரும். மற்றனவும், நூலறி புலவர் தொகுத்த ஆண்பால் பெயர்கள் என்று சொல்லுவர். 'ஏற்று' என்றும் பாடம் உண்டு.



### பெண்பால் பெயர்கள்

**பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்**
**மூடும் நாகும் கடமையும் அளகும்**
**மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்**
**அந்தம் சான்ற பிடியொடு பெண்ணே.** 1493

பேடை, பெடை, பெட்டை, பெண், மூடு, நாகு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிணை, பிணவு, பிடி என முடிகின்ற பதின்மூன்றும் பெண்பால் பெயர்களாம். 'அந்தம் சான்ற' என்பதற்கு முடிவை உடைய என்பதே நேரான பொருளெனினும் அந்தம் சான்ற என்பதற்கு அழகு பொருந்திய பிடி என்றும் பொருள் கூறுவர். அந்தம் - முடிவு. ஆதி அந்தம் - முதலும் முடிவும். பொருள் - மரபியல். அந்தம் இலான் வரக் கூவுவாய் - திருவாசகம். 'அந்தமில் புகழ் ஆரூர் அறநெறி' - அப்பர் தேவாரம்.

### 2. பார்ப்பு, பிள்ளை

**அவற்றுள்** 1494
**பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்று இளமை.**

இளமைப் பெயர்கள் - தலைப்புச் சூத்திரத்தில் சொல்லிய பார்ப்பு, பிள்ளை என்னும் இரண்டும் பறவை இனத்தில் இளமைப் பருவத்திற்கு உரிய பெயர்களாகும்.

**தவழ்பவை தாமும் அவற்றோர் அன்ன.** 149

தவழ்பவை - ஊர்வன. பாம்பு, பல்லி, ஆமை முதலியன ஊர்வனவற்றில் இளமைப் பருவத்துப் பெயரும் பார்ப்பு, பிள்ளை என வரும்.

### குட்டி

**மூங்கா, வெருகு, எலி, மூவரி அணிலொடு** 1
**ஆங்கு அவை நான்கும் குட்டிக்கு உரிய.**

Scanned with CamScanner

கீரி (மூங்கா) பூனை (வெருகு) எலி, மூன்று வரிக் கோடுகளை முதுகிலே கொண்ட அணில் (மூவரி அணில்) என்றுள்ள நான்கினது இளமைப் பருவத்துப் பெயர் குட்டி என வரும். எலிக்குட்டி, பூனைக்குட்டி என வரும்.

### பறழ்

**பறழ் எனப் படினும் உறழ் ஆண்டு இல்லை.** 1497

முன் சூத்திரத்தில் சொன்ன கீரிப்பிள்ளை, பூனை, எலி, அணில் பிள்ளை என்னும் நான்கினது இளமைப் பருவத்துப் பெயரைப் பறழ் என்று சொன்னாலும் பொருள் வேறுபாடு அங்கு இடம் பெறுவதில்லை. (உறழ் ஆண்டு இல்லை. உறழ் - வேறுபாடு)

### குருளை

**நாயே பன்றி, புலி, முயல் நான்கும்**
**ஆயும் காலை குருளை என்ப.** 1498

நாய், பன்றி, புலி, முயல் எனும் நான்கு விலங்குகளின் இளமைப் பருவப் பெயர் என்னவென்று ஆராய்ந்து பார்க்கும் போது, (ஆயும் காலை) 'குருளை' என்பதே அவற்றின் இளமைப் பருவப் பெயர் என்பது தெரிய வரும். குருளை - என்பதற்குக் குட்டி என்பது பொருள். சிங்கத்தின் குட்டியும் குருளை எனப்படும். ''சிங்கக் குருளைக்கு இடும் தீஞ்சுவை ஊனை'' என்பது கம்பராமாயணம்.

**நரியும் அற்றே நாடினர் கொளினே** 1499

நரியின் இளமைப் பெயரும் 'குருளை' என்பதே என்பது, அறிந்தவர்களுக்குப் புரிந்து கொள்ளக் கூடியதே.

### குட்டி பறழ்

**குட்டியும் பறழும் கூற்று அவண் வரையார்.** 1500



நாய், பன்றி, புலி, முயல், நரி என்னும் ஐந்தின் இளமை... பெயரையும் 'குட்டி' பறழ் என்று கூறுதல் பொருந்தும். புல... அதனைத் தவறென்று விலக்கார். (வரையார் - விலக்கார்).

### பிள்ளை

**பிள்ளைப் பெயரும் பிழைப்பு ஆண்டு இல்லை**
**கொள்ளும் காலை நாய் அலங்கடையே.** 150...

நாய், பன்றி, புலி, முயல், நரி என்னும் ஐந்தில் நாய் தவிர்த்... மற்ற நான்கிற்கும் (பன்றி, புலி, முயல், நரி) இளமைப் பருவ... பெயராக 'பிள்ளை' என்று வழக்கில் செய்யுளில் ஏற்று... கொள்வதைக் (கொள்ளுங் காலை) தவறு என்று சொல்வதில்லை... பிழைப்பு - தவறு. ஆண்டு - செய்யுளில், வழக்கில. நாய்... அலங்கடை - நாய் நீங்கலாக.

### மறி

**யாடும் குதிரையும் நவ்வியும் உழையும்**
**ஓடும் புல்வாய் உளப்பட மறியே.** 1502

ஆடு (யாடு) குதிரை, வரைமான் (நவ்வி) கலைமான் (உழை) ஓடிப்பாயும் தன்மை உடைய புள்ளிமான் (புல்வாய்) என்னும் ஐந்து விலங்கினங்களின் இளமைப் பருவத்துப் பெயர் மறி என்பதே. ஆட்டின் ஒருவகை செம்மறி ஆடு என்றே அழைக்கப்படும்.

### குரங்குக் குட்டி

**கோடு வாழ் குரங்கும் குட்டி கூறுப.** 1503

கோடு - மரக்கிளை. மரக்கிளைகளையே இருப்பிடமாகக் கொண்டு வாழும் குரங்குகள் இளமையில் 'குட்டி' என்று கூறப்படும்.

### மகவு எனவும் கூறுதல் உண்டு

**மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்**
**அவையும் அன்ன அப் பால்ஆன.** 1504

...ந்தைய சூத்திரத்தில் சொல்லியபடி குரங்கை இளமைப் ...த்தில் குட்டி என்று சுட்டுவதோடு, மகவு, பிள்ளை, பறழ், ...ு என்னும் நான்கும் கூட, குரங்கின் இளமை பருவத்துக்கு ...ய பெயர்களாகக் கூறத் தக்கனவாம்.

### கன்று எனும் பெயர்க்கு உரிய

**யானையும் குதிரையும் கழுதையும் கடமையும்**
**மானோடு ஐந்தும் கன்று எனற்கு உரிய.** 1505

யானை, குதிரை, கழுதை, கவரிமான், மான் என்னும் ...ின் இளம்பருவம் 'கன்று' என்றழைத்தற்கு உரியதாகும். ...னக் கன்று, மான்கன்று, என வரும்.

**எருமையும் மரையும் வரையார் ஆண்டே.** 1506

எருமை, மரை என்னும் ஒருவகைமான், இரண்டினையும் இளமையில் கன்றெனக் கூறுதல் ஏற்புடையதே, விலக்கத் ...க்கதல்ல. வரையார் - நீக்கார்.

**கவரியும் கராமும் நிகர் அவற்றுள்ளே.** 1507

கவரிமானும் (கவரியும்) கரடியும் (கராம்) இளமையில் கவரிமானுக்கு நிகராகப் ...யரை, எருமை கவரிமானுக்கு நிகராகப் 'கன்று' என்னும் பெயரை, பெறத்தக்கனவே ஆகும்.

**ஒட்டகம் அவற்றோடு ஒருவழி நிலையும்** 1508

ஒட்டகமும் கூட குதிரை, எருமை, மான் இவற்றோடு ஒருவகையில் கன்று என்னும் இளமைப் பெயர் பெற்று நிற்கும்.

### குழவி

**குஞ்சரம் பெறுமே குழவி பெயர்க் கொடை** 1509

குஞ்சரம் - யானை. குழவி - குழந்தை. பெயர்க்கொடை - பெயர்ச்சிறப்பு. யானையின் இளங்கன்று 'குழவி' என்றழைக்கப்படும் பெயர்ப் பெருமை பெறும்.



**ஆவும் எருமையும் அது சொலப் படுமே** 1510

யானையைப் போலவே பசுவும் எருமையும் இளமையில் குழவி என்றே சொல்லப்படும். ஆ-பசு

**கடமையும் மரையும் முதல் நிலை ஒன்றும்.** 1511

கடமை - கடமா, காட்டுப்பசு. மரை - ஒருவகை மான். இரண்டின் இளமைப் பெயரும் குழவி என்னும் முதல்நிலை பெயரில் நிலைக்கும்.

**குரங்கும் முசுவும் ஊகமும் மூன்றும்**
**நிரம்ப நாடின் அப்பெயர்க்கு உரிய.** 1512

குரங்கு, கருங்குரங்கு, மந்திக்குரங்கு என்னும் மூன்றினைப் பற்றித் தீவிரமாக ஆராய்ந்தால், அவையும் குழவி என்னும் அந்த இளமைப் பருவப் பெயருக்கு (அப்பெயர்க்கு) உரிய... என்பது தெரியும்.

### குழவி, மகவு

**குழவியும் மகவும் ஆயிரண்டு அல்லவை**
**கிழவ அல்ல மக்கட் கண்ணே.**

'குழவி', 'மகவு' என்னும் இந்த இரண்டு மட்... (ஆயிரண்டு) மக்கள் இளமைப் பருவப் பெயருக்கு உரி... இவை அல்லாத மற்றவை (அல்லவை) எல்லாம் மக்... உரியன அல்ல. கிழவ - உரிமை உடைய.

### ஓர் அறிவுடைய உயிர்க்கு

**பிள்ளை, குழவி, கன்றே போத்து எனக்**
**கொள்ளவும் அமையும் ஓர்அறிவு உயிர்க்கே.**

பிள்ளை, குழவி, கன்று, போத்து என்னும் ந... அறிவுடையவற்றின் இளம்பருவப் பெயர்களாகக் பொருந்தும். போத்து - நீர்வாழ் உயிரினம்.



Scanned with CamScanner

### இளமைப் பெயர் இல்லை இவற்றிற்கு

**நெல்லும் புல்லும் நேரார் ஆண்டே.** 1515

நெல், புல் இரண்டும் கூட ஓர் அறிவுடைய உயிர்த் தாவரங்கள்தான் என்றாலும், அவை முன் சூத்திரத்தில் சொல்லப்பட்ட பிள்ளை, குழவி, கன்று, போத்து என்னும் நான்கு இளம்பருவப் பெயர்களைக் கொள்ளுதலில்லை. நேர்தல் - கொள்ளுதல். நேரார் - கொள்ளார்.

### இதுவே முடிவு - இதற்கு மேல் இல்லை

**சொல்லிய மரபின் இளமை தானே**
**சொல்லும் காலை அவை அல இலவே.** 1516

சொல்லிய - இதுவரை சொல்லி வந்த இளம்பருவத்துப் பெயர் மரபுகள் தவிர்த்து, வேறு இளமைப் பருவ மரபுப் பெயர்கள் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

## 3. உயிர்ப் பகுப்பு

**ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே**
**இரண்டு அறிவதுவே அதனொடு நாவே**
**மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே**
**ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே.** 1517

ஒன்றறிவதுவே - ஓர் அறிவு உடை உயிர் என்பது, உற்று அறிவதுவே - தன் உடல் உணர்வு கொண்டு அறிவது. புல், மரம், தாமரை, அனிச்சம், (மோப்பக் குழையும்) தொட்டால் சுருங்கி இவை ஓரறிவுடையன. இரண்டறிவுடைய உயிர் என்பது, உடலாலும், நாவாலும் உணர்ந்தறிவது. சங்கு நத்தை போன்றவை. மூன்றறிவுடைய உயிர் என்பது உடலாலும், நாவாலும் மூக்கால் முகர்ந்தும் அறியும் தன்மையும் கொண்ட



எறும்பு, கரையான். நான்கறிவுடைய உயிர் என்பது, உடம்பாலும் வாயாலும் மூக்கினாலும், கண்ணாலும் கண்டுணரும் தன்மையது. தும்பி, வண்டு. ஐந்தறிவுடைய உயிர் என்பது, உடலாலும், வாயாலும், மூக்காலும், கண்ணாலும் காண்பதோடு நிற்காமல், காதால் கேட்டும் உணருவது. விலங்குகள், பறவைகள். ஆறறிவு பெற்ற உயிர் என்பது உடலால், வாயால், மூக்கால், கண்ணால், செவியால், உணர்ந்தும் உண்டும், முகர்ந்தும், பார்த்தும், கேட்பதும் என்பதோடு நில்லாமல் மனத்தால் எண்ணிப் பார்க்கும் சிறப்பறிவு உடையதாகும், என்று புலனெறி அறிந்த பொறி உணர்வுடையோர் வகைப்படுத்தி உள்ளனர். உற்றறிவது - தொட்டறிவது. நெறிப்படுத்துதல் - முறைப் படுத்துதல். பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள். புலனறிவு எனபது இவற்றின் செயல்கள், உணர்தல், உண்ணுதல், காண்டல், நுகர்தல், கேட்டல் என்ற ஐந்தும்.

### ஓர் அறிவு

**புல்லும் மரனும் ஓர் அறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.** 1518

புல், மரம் (மரன்) இவை ஓரறிவுடையவை. இவை போல ஓரறிவுடைய மற்றவையும் (பிறவும்) உண்டு. அவை அத்தாவர வகையைச் சேர்ந்த தாமரை, கொட்டி போன்ற நீர்த்தாவரங்கள்.

### ஈர் அறிவு

**நந்தும் முரளும் ஈர் அறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.** 1519

நந்து - நத்தை. முரள் - சிப்பி. இவை இரண்டறிவுடையன. இவை போலவே இவற்றின் இனமான (கிளை-இனம்) சங்கு கிளிஞ்சல் ஆகிய நீரில் பிறப்பனவும் ஈரறிவுடைய உயிர்களில் அடங்கும்.

Scanned with CamScanner

### மூவறிவு

**சிதலும் எறும்பும் மூ அறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.** 1520

சிதல் - கரையான், எறும்பு இவையும் மூன்றறிவுடைய உயிர்களாம். இவைபோல இவற்றின் இனமான மற்றவையும் உள்ளன அவை, அட்டை, பூச்சி முதலியன. கிளைப் பிறப்பு - இனத்தோடு சேர்ந்தது

### நாலறிவு

**நண்டும் தும்பியும் நான்கு அறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.** 1521

நண்டும், கருவண்டும் (தும்பி) நான்கு அறிவுடையன. இவை போல, இதன் இனமான நான்கறிவுடைய பிற உயிர் வகைகளும் உள. அவை, மலைவண்டு, தேனீ போன்றவை.

### ஐயறிவு

**மாவும் மாக்களும் ஐ அறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.** 1522

மா- விலங்கினம். மாக்கள் - மனத்தால் ஆய்ந்தறியும் உணர்வில்லாதவர்கள், மனிதராகப் பிறந்து விலங்கு நிலையிலேயே இருப்பவர்கள். இவையும் ஐந்தறிவுடைய உயிர்த் தொகுப்பே. இந்த இனவகையைச் சேர்ந்தவை, இதுபோலப் பிறவும் உள்ளன- பறவைகள், குழந்தைகள்.

### ஆறறிவு உயிர் மனிதர்

**மக்கள் தாமே ஆறறிவு உயிரே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.** 1523

உணர்தல், முகர்தல், சுவைத்தல், காண்டல், கேட்டல் என்னும் ஐந்தறிவுணர்வோடு, மனம் என்னும் ஆறாவது அறிவும் பெற்ற உயிர்க்குலம் மனித இனம். மனிதரைப் போன்ற இந்த ஆறாவது



அறிவு பெற்ற உயிர்க்குலம் தேவர், இயக்கர் எனவுள்ள மற்றவையாம்.

### மனிதர் போலவே

1524

**ஒருசார் விலங்கும் உள என மொழிப.**

மனிதர் போலவே ஒரு சில மிருகங்களும் ஆறறிவு பெற்றவையாய் உள்ளன என்றும் சிலர் கூறுவர். ஒருசார் - ஒரு சில மக்கள். விலங்கு - மிருகம். மொழிப - சொல்லுவர். அவை கிளி, குரங்கு, யானை போன்றவை.

இவற்றின் செயல்கள் தாமே உணர்ந்தறிந்து செயப்படுவன அல்ல. பழக்கத்தால் அவை நிகழும். இளம்பூரணர் உரையில் உள்ள இந்த சூத்திரம் சில பதிப்புகளில் இடம்பெறவில்லை.

## 4. ஆண்பால் பெயர்கள்

### களிறு

**வேழத்துக்கு உரித்தே விதந்து களிறு என்றல்.** 1525

வேழம் - யானை. விதந்து - சிறப்பித்து. களிறு என்னும் சிறப்புப் பெயர் யானைகளில் ஆண் யானைக்கு உரியது.

1526

**கேழற் கண்ணும் கடி வரை இன்றே.**

கேழல் -பன்றி. பன்றியில் ஆணை களிறு எனச் சொல்வது விலக்கவேண்டியதல்ல. ஏற்கவேண்டியதே. கடிவரை - விலக்குதல்.

### ஒருத்தல்

**புல்வாய் புலி உழை மரையே கவரி** 1527
**சொல்லிய கராமோடு ஒருத்தல் ஒன்றும்.**

புள்ளிமான் (புல்வாய்) வேங்கைப்புலி (புலி) கலைமான் (உழை)மான் (மரை) கவரிமான் (கவரி) என்று சொல்லப்பட்ட ஐந்துடன் கரடி (கராம்) இவற்றிற்கும் ஆண்பால் பெயர் ஒருத்தல் என்பது பொருந்தும் (ஒன்றும்).

Scanned with CamScanner